பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 15 புதன்கிழமை 01.12.2021 கதிர் 26

**இனி அது ரகசியம் அல்ல!**

தமிழர் தரப்பில் எல்லோராலும் அதிகம் பேசப்பட்ட அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கான அரசியல் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுமுன் தினம் இரவு கொழும்பு வந்து சேர்ந்த, கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி பக்கம்02

# படைக் காணி சுவீகரிப்பை ஒப்பேற்ற ஆளுநர் மும்முரம்!

## காணி உரிமையாளர்களுடன் இன்று பேச்சு

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம், டிசெம்பர் 01

வடக்கில் தனியார் காணிகளை கடற்படையினருக்கு சுவீகரிக்கும் நடவடிக்கைகளுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், அந்தக் காணிகளைப் படையினருக்குப் பெற்றுக் கொடுப்பதில் வடக்கு ஆளுநர் மும்முரமாக இருக்கிறார் என அறியவருகிறது.

கடற்படைத் தேவைக்கு அக்காணிகளை அளக்க முற்படும் வேளை பொதுமக்கள், அரசியல்வாதிகள் கெம்பி எழுந்து தடுத்து நிறுத்தி வருகின்றமையினால், உரிமையாளர்களை தனியாக இன்று அழைத்து அவர்களிடம் ஒப்புதல் பெறுவதற்கு ஆளுநர் முயற்சி எடுத்துள்ளார் எனத் தெரிகின்றது. 13

## தீர்வு இல்லையேல் பதவியை இழப்பீர்

### கெஹலியவுக்கு எச்சரிக்கை

எமது கோரிக்கைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படாவிட்டால் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தனது அமைச்சுப் பதவியை இழக்க நேரிடும்.

– இவ்வாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பிரச்சினை எல்லை மீறுவதற்கு முன்னர் 2

## காரைநகரில் அதிபர் அறைந்ததில் மாணவனின் செவிப்பறை பாதிப்பு


### பொலிஸ் விசாரணை ஆரம்பம்

யாழ்., காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் தாக்கியதில் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் பயிலும் மாணவர் ஒருவரின் ஒரு பக்கக் காதின் செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமையுடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அறிவுறுத்தலில் ஒழுக்காற்று விசாரணையும் நடைபெறுவள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிபர்தாக்கியுள்ளார். காதில் ஏற்பட்ட வலி காரணமாக மாணவன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மறு 2

## எரிவாயு சிலிண்டர் வெடிப்பு பற்றி ஆராய 8 பேரடங்கிய குழு கோட்டாவால் நியமனம்



வீட்டு சமையல் எரிவாயு கொள்கலன்களுடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, தீர்வுகளை முன்வைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஷாந்த வல்பலகேவின் தலைமையில் 8 பேரடங்கிய இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழுவின் ஏனைய உறுப்பினர்களாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் அதிபர் 2

## கோட்டா அரசின் சதித்திட்டமே எரிவாயு சிலிண்டர் வெடிப்பு?

### ஐக்கிய மக்கள் சக்தி சந்தேகம்

எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவம், இந்தியாவில் இருந்து எரிவாயு சிலிண்டரைக் கொண்டு வருவதற்கான ராஜபக்ஷ அரசின் சதித்திட்டமாக இருக்கலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

குறுகிய தினங்களில் இந்தளவு எரிவாயு சிலிண்டர்கள் வெடித்தது தொடர்பில் 2

## முல்லையில் மூழ்கியது கடற்படையினரின் படகு

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, நாயாற்றுப் பகுதியில் கடல் நீரோட்டத்தில் அகப்பட்ட கடற்படையினருக்குச் சொந்தமான படகு ஒன்று கடலில் மூழ்கியுள்ளது.

நாயாறு கடற்படைமுகாமுக்குச் சொந்தமான கரையோர சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபடும் 'செட்ரிக்' எனப்படும் படகே விபத்துக்குள்ளாகி மூழ்கியுள்ளது. 2

## இந்தியாவிடம் 400 மில்லியன் ரூபா இழப்பீடு கோரும் யாழ். மீனவர்கள்!

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நட்டஈடாக 400 மில்லியன் ரூபாவை இந்திய அரசு வழங்கவேண்டும் என்று யாழ். மீனவர்கள் தரப்பில் இந்தியத் துணைத் தூதுவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னராசா, 13

## யாழ். ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழா

(இ.கலையமுதன்)

யாழ். மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணனின் 'தூய நகரம்' திட்டத்திற்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் வாமதேவன் தியாகேந்திரனின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழா நாளை 2

## 18 பேர் சாவு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 7 பெண்களும் அடங்குகின்றனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் இந்த உயிரிழப்புகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரசதகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் 13

## வீட்டை விட்டு தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குக

### புதிய சுகாதார வழிகாட்டல் வெளியீடு

இலங்கையில் இன்று முதலாம் திகதி முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை அமுலுக்கு–வரும் வகையில் புதிய சுகாதார வழிகாட்டல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன வெளியிட்டுள்ளார். இதற்கமைய, பொதுமக்கள் அவசியமற்ற பயணங்களுக்காக வீட்டிலிருந்து வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும் எனப் புதிய சுகாதார வழிகாட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2



## நேற்று 722 பேருக்கு கொரோனா உறுதி

இலங்கையில் நேற்று 722 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் 13

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. நாடு திரும்பிய கையோடே நீதித் துறையுடனான தமது அக்கப்போரை ஆரம்பித்து விட்டார்.

நேற்றுக் காலை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அவர் வாதம் நன்கு எடுபட்டுள்ளது.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவை பாதுகாப்பு கலாசாலை, பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தோர் அத்துறையில் விசேட மேற்படிப்பைப் பெறுவதற்காக அமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு.

பிற பல்கலைக்கழகங்கள் போல, பிற துறைகளுக்கான பல்கலைக்கழகப் பட்டங்களையும் அது வழங்கக் கூடியதான ஏற்பாடு ஒன்றை இராணுவ விடயங்களில் விசேட கவனிப்பைக் காட்டும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அதிகார பீடம் எடுத்தது.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் கீழ் செயற்படாத இந்த அமைப்பு, தன் பாட்டில் பல்கலைக்கழகப் பட்டங்களை வழங்க அனுமதிப்பதா என்று தெரிவித்து, இந்த முயற்சிக்கு கடும் எதிர்ப்புத் தென்னிலங்கையில் எழுந்தது. அதனால் அந்தத் திட்டத்தை கைவிடுவதாக ஆட்சித் தரப்பில் அப்போது அறிவிக்கப்பட்டது.

ஆனால், இப்போது மீண்டும் சத்தம் சந்தடியில்லாமல் விவகாரம் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது.

மேற்படி பல்கலைக்கழகப் பட்டங்களை வழங்குவதற்கான அதிகாரத்தை கொத்தலாவலை அக்கடமிக்குக் கையளிக்கும் சட்டமூலம் எதுவும் இன்னும் நாடாளுமன்றுக்கு வரக் கூட இல்லை. ஆனால் அதற்கிடையில் அத்தகைய் பட்டப் படிப்புகளுக்கான விண்ணப்பங்களை கொத்தலாவலை அக்கடமி கோரியுள்ளது.

அதை ஆட்சேபித்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அது நேற்று கொழும்பு மேல்முறையீட்டுநீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தோன்றி மனுதாரர்களுக்காக வாதாடினார்.

கொத்தலாவல பாதுகாப்பு அக்கடமி சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்த்தன முன்னிலையானார்.

இந்த மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு ஏற்காமலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என அவர் வாதிட்டார்.

சுமந்திரனின் வாதத்தை அடுத்து, மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்த்தனவின் கோரிக்கையை நிராகரித்த நீதியரசர்கள், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு நோட்டீஸ் பிறப்பிக்கவும் உத்தரவு விட்டனர்.

கொத்தலாவலை பாதுகாத்து அக்கடமியை – பாதுகாப்புத் துறைப் பல்கலைக் கழகமாக மாற்றும் ஆளும் தரப்பு எம்.பிக்களின் முயற்சி பலனளிக்கப் போவதில்லை என்றே எனக்குத் தோன்றுகின்றது.

★ ★ ★

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செல்வாக்கு – ஆதரவு – மிக மோசமாக சரிந்து கொண்டு செல்வதாக மருத்துவக் கொள்கைகளுக்காக நிறுவகம் என்ற அமைப்பு மேற்கொண்டு கருத்துக் கணிப்பீடு தெரிவிக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்தவர்களில் 33 வீதத்தினர் இன்னொரு தடவை கோட்டாபயவுக்கு வாக்களிக்கக் கூடாது என்று தீர்மானித்துள்ளனர்.

கோட்டாபயவின் ஆட்சியினால் அதிருப்தியும் விரக்தியுமுற்றிருக்கும் மக்கள் கூட்டத்தினரில், 27 வீதத்தினர் நாட்டை விட்டு வெளியேறுவதே உசிதம் என்று கருதுகின்றார்கள். இவர்களில் இளைஞர்களும் படித்தவர்களுமே அதிகம்.

நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று முடிவு கட்டியோரில் 48 வீதத்தினர் 18 முதல் 29 வயதுடையோர். அத்துடன் 53 வீதத்தினர் பட்டப்படிப்புக்கு மேல் படித்தவர்கள்.

கருத்துக் கணிப்பில் பங்கு பற்றியோரில் 72 வீதத்தினர் அடுத்த வருடம் நாட்டின் பொருளாதார நிலைமை இன்னும் மோசமாக இருக்கும் என்று கருதுகின்றனர்.

கோட்டாபயவுக்கு வாக்களித்து ஏமாற்றமடைந்திருக்கும் வாக்காளர்களில் 66 வீதத்தினரின் கருத்தும் இதுதான்.

கோட்டாபயவை இன்னும் ஆதரிப்போரில் 56 வீதத்தினரும் அடுத்த ஆண்டில் பொருளாதார நிலைமை இன்னும் மோசமாகும் என்றே கருதுகின்றனர். ஆக 11 வீதத்தினரே நிலைமை அடுத்த புத்தாண்டில் சீராகும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர்.

2016 இல் மொட்டுக் கட்சி (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன) தோற்றுவிக்கப்பட்டது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் – 2018 இல் – உள்ளூராட்சித் தேர்தல்களில் ஒரு மகத்தான வெற்றியையீட்டி சாதனை படைத்தது அக்கட்சி.

நான்கு ஆண்டுகளில் அடுத்த உள்ளூரட்சித் தேர்தல். ஒழுங்கு முறையின்படி அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் அது நடத்தப்பட வேண்டும். ஆனால் நடத்தும் எண்ணத்தில் ஆட்சிப் பீடம் இல்லை. உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால் இந்த ஆட்சிப் பீடத்தின் மக்கள் செல்வாக்குப் பற்றிய பொட்டுக்கேடு அம்பலமாகி விடும்.

அதனால் அமுக்கி வாசிக்கின்றது ஆட்சிப் பீடம்.

ஓர் உள்ளூராட்சித் தேர்தலில் முகிழ்த்த மொட்டுக் கட்சி, அடுத்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி விட்டிருப்பது தான் வேடிக்கை.

– மின்னல் –

---

## கோட்டா அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாங்கள் இதற்கு முன்னர் கேள்விப்பட்டதில்லை. இந்தப் பிரச்சினையில் இருந்து ராஜபக்ஷ அரசு விலகிச்செல்லாமல் முறையான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை, நாங்கள் 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வரும்போது எரிவாயு விலை 2 ஆயிரத்து 313 ரூபாயாக இருந்தது. அதனை நாங்கள் ஆயிரத்தி 342 ரூபாவுக்கு குறைத்தோம். ஆனால், அரசு எரிவாயு விலையை 2 ஆயிரத்து 675 ரூபா வரை அதிகரித்திருக்கின்றது.

எரிவாயு சிலிண்டர் வெடிப்பதிலும் சதித் திட்டம் இருக்கவேண்டும் என்றே தோன்றுகின்றது. இதற்குக் காரணம் ஆட்சியாளரின் புதல்வர் ஒருவரின் பெயரில் இந்தியாவில் இருந்து எரிவாயு சிலிண்டரைக் கொண்டுவர திட்டமிட்டு வருவதாகத் தகவல் கசிந்துள்ளது – என்றார்.

---

## காரைநகரில் அதிபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாள் சனிக்கிழமை சேர்க்கப்பட்டுள்ளார்.

மருத்துவ சோதனையில் மாணவனின் ஒரு காதின் செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் விசாரணைகள் இடம்பெற்றன.

அத்துடன், சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டைப் பெற்ற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

மேலும், சம்பவம் தொடர்பில் அறிந்த வடக்கு மாகாண கல்வி அமைச்சு உரிய விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கையிடுமாறு அதிகாரிகளுக்குப் பணித்துள்ளது.

-கடந்த வெள்ளிக்கிழமை மாணவனை அழைத்த அதிபர் காற்சட்டை பொக்கெற்றுக்குள் கைகளை வைத்திருக்குமாறு தெரிவித்துவிட்டு 7 தடவைகள் காதுகளில் அறைந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களை அங்கங்கள் பலவீமடையும் வகையில் தாக்குவது சித்திரவதை என்ற அடிப்படையில் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## எரிவாயுசிலிண்டர்வெடிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசபந்து தென்னகோன், மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அஜித் டி சில்வா, ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டபிள்யூ.டி.டபிள்யூ. ஜயதிலக்க, பேராசிரியர் பிரதீப் ஜயவீர, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் நாராயண் சிறிமுத்து, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுதர்ஷன சோமசிறி மற்றும் இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவகத்தின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் சுஜீவ மஹகம ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட சகல தரப்பினரிடம் விசாரணை மேற்கொள்வதுடன், தற்போதுள்ள ஆய்வுகள், பல்வேறு கருத்துக்களை ஆராய்ந்தும் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மேற்படி குழுவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

---

## வீட்டை விட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டங்கள் நடத்த 150 பேருக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அறை அல்லது மண்டபத்தின் ஆசனங்களின் அளவில் மூன்றில் ஒரு பங்கு அழைப்பாளர்கள் மட்டுமே பங்கேற்க முடியும். அத்துடன் நிகழ்நிலை கூட்டங்களுக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது.

திருமண மண்டபங்களில் இருக்கைகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு இருக்கைகளுக்கே விருந்தினர்களையே அழைக்க முடியும் என்பதுடன் 200 விருந்தினர்களை விஞ்சக் கூடாது. திறந்த வெளி எனின், 250 பேர் அனுமதிக்கப்படுவர்.

இறுதிச் சடங்குகளில் ஆகக் கூடியது 20 பேரே ஒரே நேரத்தில் பங்கேற்க முடியும்.

உணவகங்களில் அவற்றின் திறனில் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாமல் அதிகபட்சம் 100 பேர் உள்ளிருந்து உணவருந்த அனுமதிக்கப்படுவர். திறந்த வெளியாயின் 150 பேர் அனுமதிக்கப்படுவர்.

பாடசாலைகள் கல்வி அமைச்சின் வழிகாட்டலிலும் உயர்கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் வழிகாட்டலிலும் இயங்க முடியும்.

நீதிமன்ற நடவடிக்கைகள் நீதிச் சேவை ஆணைக்குழுவின் வழிகாட்டலில் கொரோனாக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி முன்னெடுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீர்வு இல்லையேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)ய தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக சுகாதாரத் துறையில் நிலவும் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்றுக் காலை கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் இந்த எதிர்ப்பு வாகனப் பேரணி ஆரம்பமானது.

---

## முல்லையில் மூழ்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாயாற்றுப் பகுதியில் தற்போது அதிகளவான மழைவெள்ள நீர் பெருங்கடலுடன் கலப்பதால் நீர் ஓட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு அதிக நீரோட்டம் காணப்படும் களப்புப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் படகு விபத்துக்குள்ளாகிய வேளை படகில் சென்ற கடற்படையினர் நீந்திக் கரை சேர்ந்துள்ளார்கள். அதன் பின்பு குறித்த படகை மீட்கும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டனர்.

---

## யாழ்.ஆரியகுளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர மேயரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக தியாகேந்திரன் அர்ச்சுனா மற்றும் நிலாஜினி தியாகேந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும், யாழ். மாநகர சபை உறுப்பினர்கள், யாழ். மாநகர சபை ஆணையாளர், யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்களும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் இசைக் கலைஞர்களுக்கான கௌரவிப்பு இடம்பெறவுள்ளதோடு, கே.பி.குமரன் பஞ்சமூர்த்தி குழுவினரின் நாதசங்கமம், வாண வேடிக்கைகள், தண்ணீர் விசிறல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.




JSAC

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்களுக்கெதிரான அனைத்து விதமான வன்முறைகளும் மனித உரிமை மீறலாகும்."

16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

## University of Jaffna – Sri Lanka
## Faculty of Graduate Studies

**Postgraduate Diploma in Teaching English as a Second Language (TESL)**
**Part time course - 2021/2023 (Batch III)**

Applications are entertained from eligible candidates for the above course.
**Admission Requirements:**

1. A Degree from any recognized University
And
2. At least three years experience in Teaching English as a Second Language (ESL)in Government or recognized private schools/Institutions (documentary support should be annexed)

3. A Credit pass in English at G.C.E O/L Examination

**Course Fee** : Rs. 155, 000.00 (5000/- Refundable fee)
**Medium** : English
**Duration** : Three Semesters (One and a half year)
**Selection** : An aptitude Exam and Interview
**Application form** : 1000/-
**Closing date for Application** : 31.12.2021

The course fee can be paid in full or in three installments.

**Payment schedule:**
**At registration, beginning of first semester - 55,000.00**
**Beginning of Second Semester - 50,000.00**
**Beginning of third Semester - 50,000.00**

**Application Procedure:**

Relevant information and prescribed application form could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P.: 021 222 3608) in person or by post producing the receipt of the payment of Rs. 1000/- per application form, made to the University Account number (reference number) **(190032512101968)**at the People's Bank.

Those who wish to obtain application form and relevant information by post are requested to send a money order for Rs. 1000/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** (23 x 10 c.m in size).

Application form and other details are also available in the Faculty web site - **www.grad.jfn.ac.lk.** Those who wish to send the downloaded application form should attach the money order for Rs. 1000/- drawn in favour of the **Bursar, University of Jaffna** or the receipt of the payment made to the University Account number (reference number)**(190032512101968)**at the People's Bank.

Duly completed applications should be sent to the **Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely** by registered post or handed over in person **on or before the closing date of application.** The programme applied for should be indicated as **"Application for Postgraduate Diploma in Teaching English as a second Language - 2021"** on the top left hand corner of the envelope.

**Incomplete, illegible or late applications will not be considered.**

**Guidance for the payment**

**For Local Payment**
Please pay at any branch of the People's Bank using **the usual deposit slip.** Fill your personal information in the slip and **use reference number in place of account number.**
Take and keep a photocopy of the slip with you before providing it to the university.

**Reference Number**

| Degree | Reference No. | Amount | Reason for Payment |
|---|---|---|---|
| Postgraduate Diploma in Teaching English as a second Language 2021/23 (Batch III) | 190032512101968 | Rs 1000/- | Application form fee |

**For Foreign Payment**

If you send payment from a foreign country, please follow the instructions given below:

Following Information should be followed when making the payment.

Bank Name : **People's Bank, Sri Lanka**
Branch Code : **162**
Swift Code : **PSBKLKLX**
Bank Account Name : **University of Jaffna**
Bank Account Number : **162100310000891**
Reference No : **printed as above**

Registrar
29.11.2021.


# யாழ்.கரையோரங்களில் சடலங்கள் தொடர்ந்து கரையொதுங்குகின்றன

யாழ்.மருதங்கேணி கடற்பகுதியில் சடலம் ஒன்று, நேற்று (செவ்வாய்க்கிழமை) கரையொதுங்கியுள்ளது.

அதாவது, நான்கு நாள்களில் நான்காவதாக இந்த சடலம் கரையொதுங்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை வல்வெட்டித்துறை,மணற்காடு கரையோரத்தில் இரு சடலங்களும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு கடற்பரப்பில் ஒரு சடலமும் கரையொதுங்கியுள்ள நிலையில், நேற்று மருதங்கேணி கடற்பகுதியிலும் ஒரு சடலம் கரையொதுங்கி உள்ளது.

கரையொதுங்கிய நான்கு சடலங்கள் தொடர்பில் இதுவரை எவ்விதத் தகவல்களும் தெரியாத நிலையில், சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் உள்ளன.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
**புதிய அனுமதிகள்**

**கல்வியியல் முதுமாணி (Master of Education) 2021/22 (XIV) யாழ்ப்பாணம்**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்**

* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமும், பட்டப்பின் கல்விடிப்ளோமாவும்'
அத்துடன்
* ஒருபாடசாலையில் அல்லது யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கை நெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவம்

**தெரிவுமுறைமை:-**
* எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும்

(எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்.)

**கற்கைக் காலம்:** ஒருவருடம்
**மொழி மூலம்** : தமிழ்
**கற்கைநெறிக் கட்டணம் : 185,000/=** (5000/= மீள அளிக்கப்படும்)
**விண்ணப்பப் படிவக் கட்டணம்:** 1,000/=
**விண்ணப்ப முடிவுத்திகதி** : 31.12.2021

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை:**
1. மக்கள்வங்கியின் ஏதாவதொரு கிளையில் பணம் வைப்பிலிடும் வைப்புச்சீட்டில் **(190152502101958)** எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான ரூபா 1000/= கட்டணத்தை செலுத்திய பின் வைப்புச்சீட்டை உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

2. தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பபடிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23 ஒ 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர், உயர் பட்டப் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

3. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகவிபரங்கள் **www.grad.jfn.ac.lk** எனும் பல்கலைக்கழக வலைதள வசதியூடாகவும் **(website)** பெற்றுக்கொள்ளலாம். வலைத்தள மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/= பெறுமதியான காசுக் கட்டளையை மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு **(190152502101958)** செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்தல்**
விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு** பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் **31.12.2021** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப் பதிவாளர்,உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
29.11.2021.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கஸ்தூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காத்திருக்கின்றது ஆபத்து

**நாட்டின் பொருளாதாரம் மிக மிக மோசமான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.**

**நாடும் மக்களும் இந்த நெருக்குவாரத்துக்கு முகம் கொடுக்க முடியாது திணறிப் போகின்றனர் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.**

**வர வர நிலைமை மோசமாகிச் செல்கின்றது. இப்போது சுடுசட்டியில் இருக்கும் நெருக்கடி நிலைமை. இனி, சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்தமை போன்ற சூழல் ஏற்படும் என எச்சரிக்கப்படுகின்றது.**

**அரசின் அதி உயர் வட்டாரங்களே என்ன செய்வது எனத் தெரியாமல் பதறியடிக்கின்றன.**

**நீண்ட காலம் நாட்டின் நிதித்துறையுடன் பணியாற்றிய பி.பி.ஜயசுந்தர, இப்போது ஜனாதிபதியின் செயலாளர். ஒரு காலத்தில் திறைசேரியின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர் பதவிகளில் இருந்து பழமும் தின்று கொட்டையும் போட்டவர். ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகராகவும், நிதி அமைச்சில் நிதி மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும் பிரிவின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியவர். இலங்கை விவகாரத்தை ஒட்டி சர்வ தேச நாணய நிதியத்தினதும், உலக வங்கியினதும் ஆலோசகராகவும் பணிபுரிந்தவர்.**

**பொருளாதார விவகாரக் கொள்கை வகுப்பில் புலி என்று கருதப்படும் அவர், இப்போது ஜனாதிபதியின் செயலாளர் என்றாலும், நாட்டின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி எடுக்கும் பொருளாதாரத் தீர்மானங்களின் பின்புலம் இவரே என்றே கருதப்படுகின்றது.**

**ஜனாதிபதியின் செயலாளராக இருந்து கொண்டு, அந்தப் பதவியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, நிதி அமைச்சின் சகல விடயங்களிலும் அத்துமீறித் தலையிட்டு, தம் எண்ணப்படி காரியங்களை ஆற்றுகின்றார் என்ற ஒரு பெரும் குற்றச்சாட்டு அவருக்கு எதிராக உண்டு.**

**அவரே இப்போது நாட்டின் நிதி நிலைமை குறித்து கைவிரித்து விட்டார்.**

**"நாட்டின் பொருளாதாரம் மோசமான கட்டத்தில் உள்ளது. அது இனி, இன்னும் மிக மோசமான கட்டத்திற்குப் போகப் போகின்றது. அந்நிய செலாவணி கையிருப்பு இல்லாதமையால் இறக்குமதித் துறையில் அதிக கட்டுப்பாடு ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ளது. அது மேலும் இறுகப் போகின்றது. நாம் கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத மிகவும் மோசமான நிலை இனித்தான் வரப் போகின்றது." – என்று பி.பி. ஜயசுந்தர எதிர்வு கூறியிருக்கின்றார்.**

**'ஜேர்மனியின் உயர்ந்த ரகக் குறியீடு கொண்டவற்றுக்கு இலங்கையில் இடம்' என்ற தலைப்பிலான நிகழ்வு கொழும்பில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.**

**"இது இலங்கைக்கு நல்ல காலம் அல்ல. நான் இலங்கையின் முக்கிய செயலாளர் பதவிகளில் நீண்ட காலம் இருந்து வருகிறேன். இதுதான் என் வாழ்க்கையில் நான் சந்திக்கப்போகும் மிக மிக மோசமான பாதிப்புக் காலம். வளர்ச்சியில் பின்னடைவு மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுக்கக் காரணமாக இருந்த பல அம்சங்கள் முற்றாகவே முடங்கிப் விட்டன.**

**"வர்த்தகச் சமநிலையை முன்னர் ஓரளவு சீராக இருந்தது. ஏற்றுமதி செய்வதை விட இரண்டு மடங்கை நாடு இறக்குமதி செய்து கொண்டிருந்தது. இப்போது நிலைமை மோசமான கட்டத்தை அடைந்தமையால் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியதாயிற்று. இதுவரை காலமும் தனது சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவு செய்து வந்த நாடு இப்போது கடன், சர்வதேச வர்த்தகம் எல்லாவற்றிலும் பொறியில் மாட்டிய நிலையில் அகப்பட்டுள்ளது." – என்று அவர் மேலும் கூறியிருக்கின்றார்.**

**வரப்போகும் இக்கட்டை எப்படி எதிர்கொள்ளப் போகின்றோம்? கடவுள்தான் இலங்கையைக் காப்பாற்ற வேண்டும்.**

# 74 ஆவது சுதந்திர தின ஏற்பாட்டுக்குழு பிரதமர் மஹிந்த தலைமையில் கூடியது

74 ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்டம் 2022 ஏற்பாட்டுக் குழுவின் முதலாவது குழுக்கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

'சவாலை வெற்றி கொண்ட சுபீட்சமான தொரு தாய்நாடு' எனும் தொனிப்பொருளில் 74 ஆவது தேசிய சுதந்திர தினத்தை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பெருமையுடன் கொண்டாட வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதன்போது தீர்மானித்தார்.

தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட சகல இராஜதந்திரிகளுக்கும் 74 ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு அழைப்பு விடுக்குமாறு பிரதமர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்'க்கு இதன்போது தெரிவித்தார்.

74 ஆவது சுதந்திர தினத்தை வெற்றிகரமாகக் கொண்டாடுவதற்கு அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள் தொடர்பாக இதன்போது பிரதமரால் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சுதந்திர தினத்துக்கு முன்னதாக நடைபெறும் தர்ம உபதேச நிகழ்வை 2022 பெப்ரவரி 02 ஆம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டமையுடன், சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க, கிறிஸ்தவ சமய வழிபாடுகள் நடைபெறும் இடம் மற்றும் நேரம் என்பவற்றைப் பரிந்துரைக்கும் பொறுப்பு புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவுக்கு வழங்கப்பட்டது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு 5 லட்சம் மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது.

சுதந்திர தின நிகழ்வுகளை முறையான சுகாதார வழிகாட்டல்களுக்கமைய முழுமையாக தடுப்பூசி ஏற்றியவர்கள் மாத்திரமே பங்கேற்க வேண்டும் என பிரதமர் வலியுறுத்தினார்.

குறித்த சந்தர்ப்பத்தில் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தன, ஜீ.எல்.பீரிஸ், ஜனக பண்டார தென்னகோன், வாசுதேவ நாணயக்கார, பிரதமரின் செயலாளர் காமினி எஸ்.செனரத், அமைச்சின் செயலாளர்களான எஸ்.ஆர்.ஆட்டிகல, அனுராத விஜேகோன், பேராசிரியர் கபில குணவர்தன, ஜே.ஜே.ரத்னசிறி, என்.எச்.எம். சித்ரானந்த, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, மேல் மாகாண தலைமை செயலாளர் ஜே.சீ.ரணேபுர, திலக் ஹெட்டி ஆராச்சி, எஸ்.ஜே.எஸ்.சந்திரகுப்த, சிரேஷ்ட உதவி செயலாளர்களான பிரியங்க நாணயக்கார, நயனா சங்கல்லுலிகே, ஜனாதிபதி செயலக பணிப்பாளர் நாயகம் (ஊடகம்) சுதேச ஹெட்டிஆராச்சி, பணிப்பாளர் (ஊடகம் மற்றும் தொடர்பாடல்) சுரேன் நுவன் தாரக உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## இந்திய பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகரை இந்தியாவிற்கான உயர்ஸ்தானிகர் சந்தித்தார்

(ந.லோகதயாளன்)

இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட 27ஆம் திகதி புது டெல்லியில் உள்ள தேசிய பாதுகாப்பு சபை அலுவலகத்தில் வைத்து இந்தியாவின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீபங்கஜ் சரணை சந்தித்தார்.

உயர்ஸ்தானிகர் மொரகொடவை அன்புடன் வரவேற்ற பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சரண், அவருடன் விரிவான கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இந்தியாவின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் இலங்கை உயர்ஸ்தானிகர் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடலின்போது, பொருளாதார ஒத்துழைப்புடன் தொடர்புடைய பரஸ்பர மூலோபாய நலன்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டன.

உயர்ஸ்தானிகர் மொரகொட, 'இந்தியாவில் உள்ள இலங்கை இராஜதந்திரத் தூதரகங்களுக்கான ஒருங்கிணைந்த நாட்டு மூலோபாயம் 2021 / 2023' என்ற தனது கொள்கை வரைபடத்தின் பிரதியை பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகரிடம் வழங்கி வைத்தார்.

இந்திய வெளிநாட்டு சேவையின் உறுப்பினரான ஸ்ரீ பங்கஜ் சரண், மே 2018 இல் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், ரஷ்யாவுக்கான இந்தியத் தூதுவராகவும், பங்களாதேஷிற்கான உயர்ஸ்தானிகராகவும் பணியாற்றினார்.

## அரசியலின் மறைக்கப்பட்ட கதைகள் கூறும் நூல் பிரதமருக்கு வழங்கிவைப்பு!



'அரசியலின் மறைக்கப்பட்ட கதைகள் கூறும் கதை' நூல் அதன் ஆசிரியர் குணபால திஸ்ஸகுட்டி ஆராச்சியால் அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களில் பல்வேறு பதவிகளை வகித்த காலப்பகுதியில் கேட்டறிந்த இலங்கை அரசியலின் மறைக்கப்பட்ட ஆபத்தான, சுவாரஸ்யமான மற்றும் பல்வேறு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு குணபால திஸ்ஸகுட்டிஆராச்சி இந்த நூலை எழுதியுள்ளார்.

1981ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்று உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு, 1989ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து முதல் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான குணபால திஸ்ஸகுட்டி ஆராச்சி 1990ஆம் ஆண்டு சுற்றுச் சூழல் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார். குணபால திஸ்ஸகுட்டிஆராச்சி களனி பல்கலைக்கழகத்தில் வெகுசன ஊடகப் பிரிவில் பட்டம் பெற்றவராவார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# புதிய ஒமிக்ரோன் கொரோனா மாறுபாடு நாட்டிற்குள் வருவதை தடுக்க முடியாது

## இலங்கை மருத்துவ சங்கம் கைவிரிப்பு

புதிதாக கண்டறியப்பட்ட ஒமிக்ரோன எனப்படும் புதிய கொரோனா மாறுபாடு நாட்டுக்குள் வருவதை தடுக்க முடியாது என இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

புதிய மாறுபாடு நாட்டுக்குள் நுழையாமல் இருப்பதை உறுதி செய்ய அதிகாரிகள் ஏற்கனவே நடவடிக்கை எடுத்தமை போல் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவர், கலாநிதி பத்மா குணரத்ன தெரிவித்தார்.

புதிய மாறுபாட்டின் நுழைவு தாமதமாகலாம் என்றாலும், அது ஒருபோதும் நாட்டுக்குள் நுழையாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்றும் அவர் எடுத்துரைத்தார்.

எவ்வாறாயினும், சுகாதார விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தையும் சரியான நேரத்தில் தடுப்பூசி போடுவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, புதிய மாறுபாடு நாட்டுக்குள் நுழையக்கூடிய பல ஓட்டைகள் இருக்கின்றன என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்தார்.

விமான நிலையத்தில் உள்ள அமைப்பு மிகவும் பலவீனமாக உள்ளதென்றும் எனவே, அதிகாரிகள் இதில் சிறப்பு கவனம் செலுத்தி, அனைத்து வழிகளிலும் கொரோனா பரவல் தடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அடுத்த வருடம் உணவுப் பற்றாக்குறையுடன் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும்



## ரணில் எச்சரிக்கை

நாட்டின் தற்போதைய அந்நிய செலாவணி மற்றும் தங்கக் கையிருப்பு பற்றிய தகவல்களை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று ரணில் விக்ரமசிங்க உரையாற்றுகையில்:-

சர்வதேச நாணய நிதியத்துக்கு அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களை நாடாளுமன்றத்தில் இதுவரை சமர்ப்பிக்கவில்லை எனக் குற்றம் சாட்டினார்.

தற்போது நாம் எதிர்கொள்ளும் அந்நியச் செலாவணி பிரச்சினை தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள இந்த ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் எண்ணெய் மற்றும் நிலக்கரி வாங்குவது பற்றி பேசப்பட்டது. ஆனால், அந்நிய செலாவணி இல்லையென்றால், மற்ற நாடுகளுக்கு எவ்வாறு பணம் செலுத்துவது என்றும் ரணில் விக்கிரமசிங்க கேள்வியெழுப்பினார்.

நாட்டில் எரிபொருள் இல்லாதமையால் எதிர்காலத்தில் மின்சாரத் துண்டிப்பு ஏற்படக்கூடும் என்றும் இந்த நிலைமை ஏற்பட்டால், மக்கள் எவ்வாறு நெருக்கடியை எதிர்கொள்வது என்பது தொடர்பாக ஒரு திட்டம் இருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். மேலும் இந்த நிலைமை தொடர்ந்தால் 2022 மார்ச் மாதத்துக்குள், உணவுப் பற்றாக்குறையுடன் நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொள்ளும் என ரணில் விக்கிரமசிங்க எச்சரித்தார்.

# வடக்கின் கல்விசார் உட்கட்டமைப்பு தொடர்பில் விசேட கலந்துரையாடல்



வடக்கு மாகாணத்தில் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தாவிற்கும் கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவிற்கும் இடையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில், குறித்த பிரதேசத்தில் கல்விச் செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டமையுடன், கடந்த காலங்களில் மேற் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

பத்தரமுல்லயில் அமைந்துள்ள கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில், யாழ். பல்கலைக்கழகத்தின் சுகாதார சேவைகள் தொடர்பான பீடத்துக்கான 5 மாடிக் கட்டடத்துக்கான நிதி மற்றும் பாடசாலைகளில் இந்துஸ்தாணி இசையைப் பாடசாலை பாடத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளல் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மேலும், கடந்த காலங்களில் கல்வி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட, கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞான பீடத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உருவாக்குதல், கடல்சார் தொழில்நுட்பம் மற்றும் வளமுகாமைத்துவ பீடத்தை திருகோணமலை வளாகத்தில் உருவாக்குதல், கல்வியியல் கல்லூரிக்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கு முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு விசேட ஒதுக்கீடு வழங்குதல் போன்றவை உட்பட பல்வேறு விடயங்களில் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டன. இதன்போது, கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வடக்கின் கல்வி விடயத்தில் அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா தொடர்ச்சியாக காண்பித்து வருகின்ற அக்கறையாலேயே யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் குறித்த பிரதேசத்தில் கல்விசார் உட்கட்டமைப்புக்கள் கணிசமான அளவு வளர்ச்சியடைந்துள்ளன எனச் சுட்டிக்காட்டிய கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தன்னாலான ஒத்துழைப்புக்களை வழங்குவோம் எனவும் உறுதியளித்தார்.

அதனடிப்படையில், வடக்கு மாகாணத்தில் நிலவி வருகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவையில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்று வருகின்றன எனவும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அபிவிருத்தி மற்றும் பன்மொழி திறமை வாய்ந்த ஆசிரியர் நியமனம் தொடர்பான விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.



# இரு சிறுநீரகமும் செயலிழந்த இளம் குடும்பஸ்தர் குழந்தையுடன் உதவி கரம் கோருகிறார் மனைவி

## கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர், தனது 32 வயதிலேயே இரு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில், எண்ணற்ற கனவுகளோடு உயிர்வாழப் போராடிக் கொண்டு இருக்கின்றார்.

இந்நிலையில் குடும்பஸ்தரின் உயிரைக் காப்பதற்கு எவரேனும் தங்களுக்கு உதவுங்கள் என அவரது மனைவி கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி- புதுமுறிப்பு பாடசாலை முன் வீதியைச் சேர்ந்த செபஸ்தியான்பிள்ளை தேவராசா, தேசிய அடையாள அட்டை இல 198912703797 என்பவரின் மனைவியே கருணையுள்ளம் கொண்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்

மேலும் ஒன்றரை வயது பூர்த்தியாகியுள்ள எனது பிள்ளைக்காகவேனும் உயிர் காக்க உதவுங்கள் என அவர் கோரியுள்ளார்.

குறித்த இளம் குடும்பஸ்தர், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் சத்திர சிகிச்சை செய்வதற்கு 45 லட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் அவரது மனைவி குறிப்பிட்டுள்ளார்.

**மக்கள் வங்கி**
**கணக்கு இலக்கம்**
**048200390018363**
**தொலைபேசி இலக்கம்**
**0765335356 -**
**0774293115**

# மன்னார் நகர சபையின் தன்னிச்சையான முடிவால் வெள்ள நீரில் மூழ்கியுள்ள கிராம மக்கள்!

மன்னார் நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பல்வேறு கிராமங்களில் மன்னார் நகர சபை தன்னிச்சையாக முன்னெடுத்த வீதி அபிவிருத்திப் பணிகளின் காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

மன்னார் நகரசபைக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் மன்னார் நகரசபையால் திடீர் என கிராம மக்கள் மற்றும் கிராமங்களில் உள்ள பொது அமைப்புக்களின் எவ்வித ஆலோசனைகளும் இன்றி தன்னிச்சையாக நகர சபை இந்த வருட அபிவிருத்திக்கான நிதியை செலவு செய்யும் வகையில், நகர சபையின் தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு அமைவாக மன்னார் நகர சபைக்கு உட்பட்ட காட்டுப்பள்ளி வீதி, குருஸ் கோவில் வீதி, மூர்வீதி உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ள வீதிகளில் கிரவல் மண் கொட்டப்பட்டு வீதி அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் மன்னார் நகர சபை தன்னிச்சையாக வருட இறுதி முடிவில் நிதியைச் செலவு செய்யும் நோக்குடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் வழி நடத்தல் இன்றி மேற்படி பகுதிகளில் உள்ள வீதிகளுக்கு அளவு கணக்கு இன்றி கிரவல் மண் கொட்டியுள்ளனர்.

எனினும் வடிகான் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் மன்னார் நகர சபை மேற்கொள்ளவில்லை என பாதிக்கப்பட்ட அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக பெய்த மழை காரணமாக அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் பெய்த கடும் மழை காரணமாக மன்னார் மூர்வீதி பகுதியில் மன்னார் நகர சபையால் கிரவல் மண் போடப்பட்ட வீதிகளுக்கு அருகில் உள்ள பல வீதிகளினுள் மழை நீர் தேங்கியுள்ளமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

மன்னார் நகர சபையின் தலைவர் உள்ளிட்ட நகர சபையின் செயலாளர் ஆகியோர் தன்னிச்சையான நடவடிக்கை காரணமாகவும், திட்டமிடாத வீதி அபிவிருத்திப் பணிகள் காரணமாகவும் தாம் பாதிக்கப்பட்டுள்ளோம் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளமையோடு, நீண்ட காலப் பிரச்சினை தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 208

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**536. ஐ.நாவில் கூட தீர்வுத் திட்டம் என்பது பற்றி பரிந்துணர்வு காணப்படுவதாகத் தெரியவில்லையே?**

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சர்வதேச நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற உறுதி. அதற்கான எண்ணப்பாடு, தீர்வுத் திட்டங்கள் எவை என்பன போன்றவை சர்வதேச நாடுகளினால் ஐ.நாவில் தீர்மானங்களாக எழும்போது தான் ஆராய்வாக வரும்.

தற்சமயம் ஸ்ரீலங்காவின் மனித உரிமை மீறல்கள் ஐ.நாவின் கட்டமைப்பான ஐ.நாவின் மனித உரிமை மன்றில் ஆராய்வுக்குள்ளாகி இருக்கின்றன. முன் கூறியபடி இது இனப்படுகொலைதான் என ஆராயப்படுவதற்காக ஐ.நாவினால் பணிக்கப்பட்டது அல்ல. 2002 - 2009 இற்குரிய காலப்பகுதிகளில் நடந்தவை பற்றி ஆராய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த ஆராய்வில், அந்தக் காலப்பகுதியில் சர்வதேச உரோம சட்டத்தின் படி பிரதானமாக வகுக்கப்பட்ட குற்றங்கள் நடந்தனவா என சாட்சியங்களின் அடிப்படையில் ஆராயும். அப்படி பிரதானமாக வகைப்படுத்தப்பட்ட குற்றங்களில் ஒன்றாக இனப்படுகொலையும் உண்டு. மற்றவை மனிதாபிமானத்திற்கு எதிரானவை. போர் ஆக்கிரமிப்புக் குற்றங்களையும் வகைப்படுத்துகிறது. அப்படி வகைப்படுத்தப்பட்ட உறுப்புரைகளின் கீழ் அடங்கும் குற்றச் செயல்களை விரிவாகக் கூறுகின்றது. அவற்றில் எவையேனும் ஒன்று புரியப்படின் அவற்றை விசாரணை செய்யவும் தண்டிக்கவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு (சர்வதேச மனித உரிமை மன்றுக்கு அல்ல) நியாயாதிக்கம் வழங்குகிறது. இவற்றைப் பாவித்துத் தான் தமிழ் மக்களுக்காக இரு வழக்குகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குகளாக ஏற்கும்படி சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த சமர்ப்பணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டுமே வழக்குகளாகப் பதியப்பட்டு அவை மேல் விசாரணைகளுக்கு பாரப்படுத்தப்படும். மனித உரிமைகளுக்கும், மனிதாபிமானங்களும், மனித குலத்தின் நியாயமான நடத்தைகளுக்கு எதிரான குற்றங்கள் இழைக்கப்பட்டதால் சமர்ப்பணத்தில் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நாட்டை விட்டுப் பலவந்தமாக வெளியேற நேர்ந்தது எனவும், அப்படிப்பட்ட மீறுதல்கள் தொடர்ந்தும் நடப்பதால் தாங்கள் திரும்பவும் நாட்டுக்குத்திரும்ப முடியாமல் இருப்பதால் இவற்றின் காரணங்களை விசாரித்து அவர்கள் திரும்பக் கூடிய அடிப்படைத் தீர்வுகள் ஆராயப்பட வேண்டும் என்பது கோரிக்கை. ஆகவே அந்தச் சமர்ப்பணங்கள் உரோம சட்டத்தின் மனிதாபிமானத்திற்கு எதிரான உறுப்புரையின் கீழ் அதனுள் அடக்கப்பட்ட 'குடியகற்றுதல் அல்லது பலவந்தமாக மக்களை வெளியேற்றுதல்' (Deportation or forcible transfer of population), சித்திரவதை (Torture), கைதுகள், சர்வதேச சட்டங்களுக்கமையாத தடுப்புக்கள் (Imprisonment or other severe deprivation of physical liberty in violation of fundamental rules of international law), கற்பழிப்பு போன்றவற்றை ஆதாரப்படுத்தி நீதி விசாரணை கேட்கின்றன.

அந்தந்த விண்ணப்பதாரிகளுக்கு நடந்தவை என்ற அவர்களின் சாட்சியங்களிலும் அதைப்போன்று ஆவணப்படுத்தப்பட்ட பல சம்பவங்கள் ஸ்ரீலங்காவில் நடந்திருப்பதால் அதனை நிறுவுவது இலகுவானதாகலாம் என்ற அபிப்பிராயம் அவர்களது சட்டத்தரணிகளால் (அரசியல் தலைவர்களாலல்ல) எடுக்கப்பட்டது. அவர்கள் தமிழ் மக்களுக்கு நடத்தப்படும் இனப்படுகொலையால்தான் இப்படியாக நாட்டைவிட்டு வெளியேற வந்தது என்ற ஆய்வுக்குத் தூண்டவில்லை.



ஐ.நா. பாதுகாப்புச் சபை அமர்வு

இவை வழக்கு என நடத்தப்படுமானால் அதில் குற்றப் பொறுப்புடமையென்பது வலுவானது என்றோ பலவீனமானது என்றோ மதிப்பிட முடியாது. ஆதலால் இதில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அவற்றை முழுமையாக எதிர்த்து வாதாடுவார்கள்.

**537. அப்படியானால் சர்வதேச மனித உரிமை மன்று உரோம சட்டத்திற்கு எதிரான எல்லாக் குற்றங்களையும் பார்க்குமா?**

2002 - 2009 இல் நடந்த எல்லா குற்றங்களையும் ஆராயும். அந்தக் காலங்களில் அதற்கு முன் இருக்கும் சாட்சியங்களின்படி இனப்படுகொலை நடந்ததா எனவும் ஆராயும்.

ஆனால், எமது அரசியல் பரப்புக்கள் தான் தங்களது அரசியலுக்காக மக்களது உணர்ச்சிகளுக்கு அமைவாக அங்கு நடந்தது இனப்படுகொலைதான் என நிறுவப்பட வேண்டும் என மல்லுக்கட்டி நிற்கிறார்கள். அதை வைத்து அரசியல் இலாபம் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சர்வதேச நாடுகளிடையே ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக பெரியளவில் மனித குலத்திற்கு எதிரானதும் போர்க்குற்றங்களும் இழைத்துள்ளது என்ற அபிப்பிராயம் வலுவாக உள்ளது. ஆனால் அது இனப்படுகொலையாகத் தான் நடந்ததா என்ற அபிப்பிராயங்கள் பலவாறாக அரசியல் ரீதியாகவும் அவற்றின் உந்துதல்களாலும் உண்டு. ஆகவே இனப்படுகொலைதான் என நிறுவ வேண்டிய பெரிய பொறுப்புடன் அதன் எதிர்வினைகளில் நின்று மல்லுக்கட்டாமல் ஐ.நாவில் மனித குலத்திற்கெதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் நடைபெற்றனவென்று சர்வதேசம் ஆதரவு தரக்கூடியவைகளை முன்னெடுப்பது சுலபமாக இருக்கும். மற்றது இந்தக் குற்றங்கள் ஏதாவதில் ஒன்று நடத்தப்பட்டது என நிரூபணமானாலும் பரிகார நீதி அமைய வேண்டும். அந்தப் பரிகார நீதியில் சுயநிர்ணய உரிமை உள்ளடக்கப்படலாம். அவற்றை முன்னெடுப்பது தமிழ் மக்களின் பொறிமுறையை இலகுவாக்கும்.


பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனோ, இசைப்பிரியாவோ இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள். கொல்லப்பட்டதோ, காணாமலாக்கப்பட்டதோ எல்லாம் ஓர் இனப்படுகொலையின் அங்கம் என நிறுவுவது எமது உணர்ச்சிகளுக்கு அமைவாக இருப்பினும் அவற்றைப் போர் அன்றில் மனித குலத்திற்கெதிரான குற்றங்களாக ஏற்றுக்கொள்வது சாட்சிய அடிப்படைகளில் இலகுவாக அமையும்.

உணர்ச்சிகளில் இருந்து பிரிந்து நின்று இவற்றை சட்ட அமுலாக்கலின் தேவைகளாகப் பார்க்க வேண்டும்.

இவற்றை அரசியலில் இருந்தும் பிரித்தெடுத்து, யதார்த்தமாக மனித உரிமை சட்டங்களை ஒட்டி அணுகுவது முன்னேற வைத்து விரைவான தீர்மானங்களை மேற்கொள்ளவும் வழிவகுக்கும்.

இவை பற்றி முன்னர் குறிப்பிட்டு மனித உரிமை மீறல்களை சட்டரீதியாக முன்னெடுக்க சர்வதேச கட்டமைப்பு ஒன்று தமிழ் மக்கள் நிறுவவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தபோது கூட்டமைப்பின் மாவை சேனாதிராசா தாங்கள் ஜஸ்மின் சூக்கா போன்ற பெரு மதிப்புள்ள மனித உரிமை ஆர்வலர்களுடன் சேர்ந்து ஒரு கட்டமைப்பு நிறுவுவோம் என்றார். அது இதுவரை நிறுவப்பட்டதாகத் தெரியவில்லை. தலைவர் ஒருவர் கட்சிகளுக்கிடையே ஒற்றுமையாகத் தெரியப்பட்டதாகவும் இல்லை. மனித உரிமை மன்றிலோ அல்லது ஐ.நாவின் முன் உதவிகள் தரத் தேவையானவை அரசியல்வாதிகளின் வருடாந்த விழாக்களில் வரவுகளோடும் பத்திரிகை அறிவிப்புக்களோடும் முடிந்து விடுகின்றன. அவர்களை விலத்தி தமிழ் மக்கள் அர்ப்பணிப்புள்ள, ஆளுமையுள்ள சட்டத்தரணிகளையோ சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் ஒரு கட்டமைப்பாக அமைத்து, அவர்களைத் தொடர்ச்சியாக அனுப்பி, அங்கு இயங்குவோரோடு தேவையான முனைப்புக்களுக்கு வலுச்சேர்க்க வேண்டும். அதே போல் சர்வதேசத்திலும் ஒரு கட்டமைப்பு இணைந்து செயல்படக் கூடிய வழியில் நிரந்தரமானதாகவும் நிலைத்ததாகவும் அமைக்கப்பட வேண்டும்.

அரசியலை விலத்தி அமைக்கப்படும் அப்படியான அணிகள் ஏற்படுத்தாது ஐ.நாவின் கட்டமைப்புக்களை எதிர் கொள்வது சுலபமானதல்ல. முக்கியமாக அரசின் பணத்தோடும் துணையோடும் சிங்கள பௌத்த பிரதிநிதிகள் பிரச்சார மேடைகளில் ஆதிக்கம் செலுத்தும்போது அதில் இரண்டு பங்கு கஷ்டங்கள் உள்ளன. அப்படிச் செய்ய முன்வரும் அர்ப்பணிப்புள்ளவர்களே தமிழ் மக்களின் வளம். அப்படியான வளங்களை ஒற்றுமையாகப் பெருக்கிக் கொள்ளாமல் தமிழ் மக்கள் அவர்களின் சுயநல தரப்புகளால் அதனை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள்.



ஐ.நா. பொதுச்சபை அமர்வு

(வளரும் .....)

● முருகபூபதி

# புலம்பெயர் தமிழிலக்கிய முன்னோடி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

இயற்கை எழில் கொஞ்சிய கிழக்கிலங்கை கிராமத்திலிருந்து இங்கிலாந்து வரையில் பயணித்த பெண்ணிய ஆளுமை இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம். படைப்பு இலக்கியத்திலும், பெண்ணிய மனித உரிமை செயற்பாட்டிலும் ஆவணப்படத்துறையிலும் மனித நேயப் பணிகளிலும் அயராது பங்காற்றியவர் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம். அவரது வாழ்வும் பணிகளும் குறிப்பிடத்தகுந்தன.

பெண்கள் எப்பொழுதும் வீட்டுக்குள் இருந்து குடும்பக் கடமைகளைப் பார்த்தால் போதும் என்றும் - அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்றும் சொல்லப்பட்டு, அவர்களுக்கு தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையும் மறுக்கப்பட்ட ஒரு காலம் முன்பிருந்தது.

சமையல்கட்டு வேலை, பிள்ளைப் பராமரிப்புடன் கணவனின் தேவைகளை பூர்த்திசெய்யும் இயந்திரமாகவும் பெண்ணின் வாழ்வு முடக்கப்பட்டிருந்த காலம் மலையேறிவிட்டது என்று இன்னமும் சொல்லமுடியாதிருக்கிறது.

அக்கரைப்பற்று கோளாவில் கிராமத்திலிருந்து இங்கிலாந்துக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன்பு சென்ற இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், புலம்பெயர் தமிழ் இலக்கியத்தின் முன்னோடியாவார்.


அவரது எழுத்துக்களை இலங்கையில் 1980 களில் படிக்க நேர்ந்த பொழுது, இவர் பற்றிய எந்த அறிமுகமும் எனக்கு இருக்கவில்லை. பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இராஜேஸ்வரி எழுதி, அலை வெளியீடாக வந்திருந்த ஒரு கோடை விடுமுறை நாவல் வெளியீட்டு அரங்கிற்குச் சென்றிருந்தேன்.


பெண்ணியவாதி நிர்மலா, மூத்த எழுத்தாளர் செ.கணேசலிங்கன் உட்பட சிலர் அங்கு உரையாற்றினார்கள். ஆனால், அவர்களின் கருத்துக்களுக்கு ஏற்புரை சொல்ல அந்த மண்டபத்தில் இராஜேஸ்வரி இருக்கவில்லை.

எனினும், அந்நாவல் வெளியீட்டுக்குப் பக்கபலமாக இருந்து பதிப்பித்தவரும் தற்பொழுது லண்டனில் வதிபவருமான இலக்கிய ஆர்வலர் பத்மநாப ஐய்யர் கலந்துகொண்டமை நினைவிருக்கிறது.

ஓர் ஈழத்தமிழனின் புகலிட வாழ்வுக்கோலத்தை முதன் முதலில் இலக்கியத்தில் பதிவுசெய்த முன்னோடி நாவல் ஒரு கோடை விடுமுறை. இறுதியில் அந்நாவலின் நாயகன் காரில் சென்று விபத்துக்குள்ளாகி மடிகின்றான். அது தற்கொலையா... விபத்தா .... என்பது மறைபொருளாகியிருந்தது. வாழ்வில் மன அழுத்தம் என்பது என்ன..? என்பதையும் அந்த நாவல் பூடகமாகச் சித்தி






ரித்திருந்தது. அந்நிலைக்கு இன்று இலங்கையிலும் புகலிட நாடுகளிலும் பல்லாயிரக்கணக்கானோர் இலக்காகியிருக்கின்றனர்.

இராஜேஸ்வரி நான்கு தளங்களில் ஒரேசமயத்தில் இயங்கியிருக்கின்றமையை அவதானிக்கலாம்.

படைப்பிலக்கியம், பெண்ணிய மனித உரிமைச்செயற்பாடு, ஆவணப்படம், இவற்றுக்கு மத்தியில் தொழில் முறையில் தேர்ச்சிபெற்ற மருத்துவ தாதி. ஒரு பெண் இவ்வாறு நான்கு தளங்களில் இயங்கியவாறு தனது பிள்ளைகளின் பெறுமதியான தாயாகவும் பேரக்குழந்தைகளின் பாசமுள்ள பாட்டியாகவும் தமது வாழ்வைத் தொடர்ந்து வருகிறார்.

இவருடைய தந்தையார் குழந்தைவேல்தான் இவரது ஆதர்சம். அவர் வைத்தியராகவும் கூத்துக்கட்டும் கலைஞராகவும் பல தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்தவராகவும் விளங்கியவர். அத்துடன் வேளாண்மை வயல்களைப் பராமரிக்கும் வட்டைவிதானையாகவும் வாழ்ந்தவர். அவரிடமிருந்த கலை ஆர்வம், ஆளுமைப்பண்பு, வாசிப்பு அனுபவம் என்பன சிறுமி இராஜேஸ்வரிக்கு அன்றே இடப்பட்ட பலமான அத்திபாரம்.

இவரது கிராம வாழ்க்கை, யாழ்ப்பாணத்தில் பெற்ற தாதியர் பயிற்சி, எழுதத் தொடங்கிய பருவம் – முதல் கவிதை வெளியான வீரகேசரி பத்திரிகையில் தாயார் யாருக்கோ வீட்டுத்தோட்டத்தில் வளர்ந்த கீரையை பறித்து சுற்றிக்கொடுத்ததால் அந்தக்கன்னிப்படைப்பை தொலைத்துவிட்ட சோகம், யாழ்ப்பாணத்தில் சாதி அமைப்பு முறையையும் அதன்கொடுமையையும் நேரில் பார்த்து கொதித்தெழுந்த தர்மாவேசம், இடதுசாரி சிந்தனையுள்ள கணவருடன் அவரது நண்பர்கள் மார்க்ஸ், லெனின், ஏங்கல்ஸ் பற்றி உரையாடும்பொழுது அவர்கள் கொழும்பில் வசிக்கும் கணவரின் நல்ல நண்பர்கள் போலும் என்று நம்பிக்கொண்டிருந்த அப்பாவித்தனம், லண்டனுக்கு புலம்பெயர்ந்த பின்னர் ஈடுபட்ட பெண்ணிய மற்றும் மனித உரிமைச்செயற்பாடுகள், திரைப்படத்துறையில் முன்னேற எடுத்துக்கொண்ட முயற்சிகள், அரசியல் செயற்பாட்டாளராக மாறியதும் பலரதும் அவதூறுகளை எதிர்கொண்டு அவற்றை வெற்றிகொண்ட ஆளுமை முதலான பல்வேறு விடயங்களையும் மனம் திறந்து பகிர்ந்துகொண்ட விரிவான நேர்காணலை நண்பர் ஷோபா சக்தி தமது தோழர்களுடன் இணைந்து பதிப்பித்த கனதியான இலக்கியத்தொகுப்பு குவர்னி காவில் படித்திருக்கின்றேன்.

நான் அறிந்தவரையில் எமது சமூகம் மட்டுமல்ல, கீழைத்தேய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் சமூகங்களும் பெண்களை அடக்கியாள்வதில்தான் பெருமை பெற்றன. பெண்கள் பிள்ளை பெறும் இயந்திரங்களாகவும் சமையல் கட்டுக்குரியவளாகவும் ஆண்களின் தேவைக்கு ஏற்ப போகப்பொருளாகவும் இருந்தால் மாத்திரம் அதுவே பெண்மைக்கு இலக்கணம் என்று கருதிய ஆணாதிக்க சமுதாயத்தில், ஒரு பெண் துணிந்து கற்று ஆசிரியராக, மருத்துவ தாதியாக, மருத்துவராக வந்துவிட்டால் ஓரளவு பொறுத்துக்கொள்கிறது. தப்பித்தவறி நாட்டியத்தாரகையாக மிளிர்ந்தாலும் ஏற்றுக்கொள்கிறது.

ஆனால், அறிவுஜீவியாக பெண்ணியவாதியாக, அதற்கும் மேல் ஆளுமையுள்ள படைப்பாளியாகவோ, ஊடகவியலாளராகவோ மாறிவிட்டால் அவளது பெண்மைக்கே களங்கம் விளைவிக்கும் அளவுக்கு தயங்காமல் அவதூறுகளை அள்ளிச்சொரியும். உயிருக்கும் உலை வைத்துவிடும். நானறிந்த பல பெண் படைப்பாளிகள் எதிர்கொண்ட இன்னல்களை அறிவேன்.

இராஜேஸ்வரி தமது கதைகளில் பெண்களின் உணர்வுகளுக்கும் உரிமைகளுக்கும் முக்கியத்துவம் வழங்கிய பெண்ணியவாதி. இராஜேஸ்வரி, லண்டன் வாழ்க்கையில் சுகபோகம் அனுபவிக்காமல் எமது மக்களின் குரலாக இயங்கினார். இலங்கையில் நிகழ்ந்த இனவாத வன்செயல்களை அம்பலப்படுத்தி, மூவின மக்களின் ஒற்றுமையையும் வலியுறுத்தி இங்கிலாந்து அரசியல் தலைவர்கள் முதல் மனித உரிமைச் செயற்பாட்டாளர் வரையில் தொடர்ச்சியாக அழுத்தங்கள் பிரயோகித்தவர். இலங்கையின் மனித அவலங்களை சித்திரிக்கும் ஆவணப்படங்கள் இயக்கினார். தமிழகத்தில் தஞ்சமடைந்த ஈழத்து அகதிகளின் முகாம்களுக்குச் சென்று படங்களுடன் திரும்பி வந்து லண்டனில் கண்காட்சி வைத்தார். கருத்தரங்குகள், கண்டன ஊர்வலங்களில் பங்கேற்றார்.





இலங்கையில் நீடித்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இவர் இயக்கிய ஆவணப்படத்தை, முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தப் பேர ழிவை அம்பலப்படுத்திய சனல் 4 தொலைக்காட்சி அன்று நிராகரித்திருக்கிறது.

இலங்கையில் நீடித்த போர் எமது தமிழ் மக்களையும் தாயகத்தையும் இறுதியில் எங்கு கொண்டுசென்று நிறுத்தும் என்பதை அறிந்து வைத்திருந்த தீர்க்கதரிசி அவர். அதனால் அன்ரன் பாலசிங்கம் முதல் இலங்கை அரசுத் தலைவர்கள் வரையில் அவர் தனித்தும் பலருடனும் பேச்சுகளைத் தொடர்ந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)






# கொடிய எச்.ஐ.வி. நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்!





இந்த நோய் முற்றிலும் குணப்படுத்த முடியாதது. ஆனால் நோயின் தாக்கத்தை தடுக்க ஒருவர் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய சில பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் முதலாம் திகதி உலக எய்ட்ஸ் தினம் அனுசரிக்கப்படுகிறது.

எச்.ஐ.வி. நோயுடன் வாழும் மக்களுக்கும், எய்ட்ஸ் காரணமாக உயிர் இழந்தவர்களுக்கும் ஆதரவைக் காட்டுவதற்காக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. உலக எய்ட்ஸ் தினம் முதன்முதலில் 1987 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் தாமஸ் நெட்டர் மற்றும் ஜேம்ஸ் பான் ஆகியோரால் கொண்டுவரப்பட்டது.

எய்ட்ஸ் உலகளாவிய திட்டத்தின் பொது தகவல் அதிகாரிகளாக இவர்கள் இருந்தனர். எய்ட்ஸ் தினம் குறித்த தங்களது யோசனையை எய்ட்ஸ் குளோபல் புரோகிராம் இயக்குநருடன் இவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

பிறகு இந்த யோசனைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு 1988 டிசெம்பர் முதலாம் திகதி உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்கப்பட்டது. மேலும் உலக சுகாதாரத்



திற்கான முதல் சர்வதேச நாள் இதுவாகும். அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் முதலாம் திகதி இது அனுசரிக்கப்பட்டது வருகிறது.

இந்த நிலையில், உலகளாவிய ஒற்றுமை, பகிரப்பட்ட பொறுப்பு என்ற கருப்பொருள் அடிப்படையில் இந்தாண்டுக்கான உலக எய்ட்ஸ் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குடெரெஸ் 2020 உலக எய்ட்ஸ் தினத்தன்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் –

ஆரோக்கியம் ஒரு மனித உரிமை.

“உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பை அடைய ஆரோக்கியம் முதலீட்டு முன்னுரிமையாக இருக்க வேண்டும். இந்த உலக எய்ட்ஸ் தினத்தன்று, கொரோனா வைரஸை கடந்து எய்ட்ஸை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, உலகம் ஒற்றுமையுடன் நின்று பொறுப்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

எய்ட்ஸ் என்பது மனித நோயெதிர்ப்பு குறைபாடுள்ள வைரஸ் (எச்.ஐ.வி.) காரணமாக ஏற்படும் ஒரு நாள்பட்ட நோயாகும்.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட நபரின் நோயெதிர்ப்பு அமைப்பு சேதமடைந்து, உடலின் நோய் எதிர்ப்பு வலுத் திறனையும் குறைக்கிறது.

எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட நோயாளி மற்ற நோய்களை எதிர்க்கும் திறனையும் இழக்கிறார். சிடி 4 செல் எண்ணிக்கை 200க்கும் குறைவாக இருக்கும் போது இந்த நிலை ஏற்படுகிறது. இது ஆரோக்கியமான நபர்களில் சுமார் 500 முதல் 1,500 வரை காணப்படுகின்றன. உலகெங்கிலும் உள்ள நாடுகளில் எச்.ஐ.வி. பாதிப்பு பாதிக்கப்பட்டவர்களில் அதிக எண்ணிக்கையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒரு நபர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்:

1. இரத்தம், விந்து, ப்ரீ – செமினல் திரவம், யோனி மற்றும் மலக்குடல் திரவங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்ணின் தாய்ப்பால் போன்ற உடல் திரவங்கள் மூலம் இது உடலில் பரவலாம்.


2. பாதிக்கப்பட்ட நபருடன் பாதுகாப்பற்ற உடலுறவு வைத்துக்கொள்வது மற்றொரு நபருக்கு கொடிய நோயையும் ஏற்படுத்தலாம்.

3. ஊசிகள், ரேஸர் கத்திகள், கத்திகள் போன்றவற்றை பாதிக்கப்பட்ட நபருடன் பகிர்ந்து கொள்வதும் நோயின் பாதிப்பிற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

நோயின் சில அறிகுறிகள் உள்ளன. இவை பின்வருமாறு:–

1. காய்ச்சல்
2. தொண்டை புண்
3. தோல் வெடிப்பு
4. குமட்டல்
5. உடல் வலிகள்
6. தலைவலி
7. வயிற்று தொற்று போன்றவை






இந்த நோய் முற்றிலும் குணப்படுத்த முடியாதது. ஆனால் நோயின் தாக்கத்தை தடுக்க ஒருவர் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய சில பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளன. எச்.ஐ.வி. எய்ட்ஸுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளில், உடலுறவின் போது பாதுகாப்பைப் பயன்படுத்துதல், ஊசிகள், கத்திகள் போன்றவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதைத் தவிர்ப்பது மற்றும் நல்ல உடல் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குதல் ஆகியவை அடங்கும்.

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை பாதீடு ஏகமனதாக நிறைவேற்றம்



உறுப்பினர்களான ஜெயரட்ணம், நிகேதன் ஆகியோரால் பாதீடு தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் பொ.தங்கராசா பாதீட்டை முன்மொழிய, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தாமோதரராஜ் வழிமொழிய சபைக்கு வருகைதந்திருந்த 29 உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் வாக்கெடுப்பு எதுவுமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் கொல்லங்கலட்டியிலுள்ள தலைமையக மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் வரவு - செலவுத் திட்ட அங்கீகரிப்புக்கான விசேட அமர்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

39 உறுப்பினர்களைக் கொண்ட வலி.வடக்கு பிரதேசசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 17 அங்கத்தவர்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 6 அங்கத்தவர்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 2 அங்கத்தவர்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி 2 அங்கத்தவர்களையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 4 அங்கத்தவர்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 8 அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது.

இவர்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் உறுப்பினரும் சுகவீனம் காரணமாக சபை அனுமதிபெற்று கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஓர் உறுப்பினர் அமரத்துவமடைந்தமையால் அவருக்கான பதிலீட்டு உறுப்பினர் இதுவரை நியமிக்கப்படவில்லை. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் எவரும் அமர்வில் கலந்துகொள்ளவும் இல்லை.

வரவு - செலவுத் திட்ட வரைவு சபையில் தவிசாளர் சுகிர்தனால் சமர்ப்பிக்கப்பட்டது. சபை உப தவிசாளர் இராசேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## ஒமிக்ரோன் வைரஸ் பரவலை கட்டுப்படுத்த பூஸ்டர் அவசியம்

புதிதாக கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் வைரஸ் பரவலை கட்டுப்படுத்த மக்கள் அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை வைத்திய நிபுணர் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு வைரஸ் பரவலைத் தடுக்க அடிப்படை சுகாதார நடைமுறைகளைப் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறை பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர கேட்டுக்கொண்டார்.

உலகில் கண்டறியப்பட்ட ஐந்தாவது கொரோனா மாறுபாடான ஒமிக்ரோன் வைரஸ் அதிக பரவல் தன்மை கொண்டது என அவர் தெரிவித்தார்.

உறுதியான மற்றும் நிரூபிக்கப்பட்ட தரவு இல்லை என்றாலும் தடுப்பூசியால் தூண்டப்படும் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தியால் இதனை எதிர்கொள்ள முடியும் எனக் கணிக்கப்பட்டுள்ளது எனக் கூறினார்.

இருப்பினும் தடுப்பூசியை செலுத்திக்கொண்ட மக்களும் புதிய மாறுபாட்டால் பாதிக்கப்பட்ட நிகழ்வுகளும் உள்ள அதே நேரத்தில் டெல்டாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் புதிய மாறுபாட்டுடன் மீண்டும் தொற்று ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். எவ்வாறாயினும், மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனக் குறிப்பிட்ட வைத்தியர் சந்திம ஜீவந்தர, அடிப்படை சுகாதார நடைமுறைகளை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் சினோபோர்ம் தடுப்பூசியை செலுத்திக்கொண்டவர்களுக்கு நோயெதிர்ப்பு சக்தியின் அளவு குறைந்து வருவதால், அவர்கள் மூன்று மாதங்கள் கழித்து ஒரு பூஸ்டர் டோஸ் எடுக்க வேண்டும் என்றும் வைத்தியர் சந்திம ஜீவந்தர குறிப்பிட்டார்.

# ஜனாதிபதி செயலணிக்கு தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள்

### விசேட வர்த்தமானி வெளியானது



கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணிக்கு புதிய உறுப்பினர்கள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

குறித்த மூன்று உறுப்பினர்களும் மூவினத்தை பிரதிநிதித்துவம் படுத்தும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நில அளவையாளர் ஆரியரத்ன திசாநாயக்க, ஓய்வு பெற்ற மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், விரிவுரையாளா முபிசால் அபூபக்கா ஆகியோர் இந்த ஜனாதிபதி செயலணியின் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஜனாதிபதி செயலணி கடந்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. செயலணியின் உறுப்பினர் கட்டமைப்பை விரிவாக்கும் நடவடிக்கைகளுக்கமைய இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, செயலணியின் உறுப்பினராக கடமையாற்றி வரும் நில அளவையாளர் நாயகம் எம்.எஸ்.பீ. தென்னக்கோன் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மஹிந்த சமரசிங்கவின் வெற்றிடத்துக்கு லலித் வர்ண குமாரவை நியமிக்க முடிவு

மஹிந்த சமரசிங்கவின் இராஜினாமாவை அடுத்து வெற்றிடமாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு மஞ்சு லலித் வர்ண குமாரவை நியமிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த தீர்மானத்தை நேற்று (செவ்வாய்க்கிழமை) எட்டியதுடன், அது தொடர்பான வர்த்தமானியும் வெளியிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவராக பதவியேற்பதற்காக மஹிந்த சமரசிங்க நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 347 பேர் குணமடைவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 347 பேர் குணமடைந்து நேற்று (செவ்வாய்க்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, இதுவரை நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 40 ஆயிரத்து 387 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், தொற்றுக்குள்ளான மேலும் 8 ஆயிரத்து 552 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 17 ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் மன்னார் மாவட்டத்தில் நீரில் மூழ்கியுள்ளன

### கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் மரின்குமார் தெரிவிப்பு



நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக பெய்த அடை மழையால் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள சுமார் 17ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன என மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.மரின்குமார் தெரிவித்துள்ளார்.

பலத்த மழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பயிர் அழிவு தொடர்பில் உதவி ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தில் கடந்த 22 கால போக நெற்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட 13 கமநல சேவைகள் நிலையங்களின் கீழும் இதுவரை சுமார் 33 ஆயிரத்து 994 ஏக்கர் வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் விதைப்புக்காகத் தயார்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக பெய்த அடை மழை மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 17 ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 5 ஆயிரத்து 555 ஏக்கர், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 400 ஏக்கர், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 345 ஏக்கர், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 825 ஏக்கர், மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 42 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதைத் தவிர செய்கை பண்ணப்பட்டுள்ள மரக்கறிகள் மற்றும் ஏனைய உணவுப் பயிர்களுக்கும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் எமது கமக்காரர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வெள்ள நீர் தற்போது வழிந்தோடி வருகின்றது. எனினும் பயிர் அழிவு தொடர்பில் எமது உத்தியோகத்தர்களால் தகவல் திரட்டப்படுவதுடன் பயிர் சேத மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம் .- என்றார்.

## 2 வயதுக் குழந்தை கிணற்றில் வீழ்ந்து சாவு

### சேந்தாங்குளத்தில் துயரம்

யாழ்.தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சேந்தாங்குளம் பகுதியில், கிணற்றில் விழுந்து இரண்டு வயது குழந்தையொன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை திங்கட்கிழமை மதியம் கிணற்றில் விழுந்த நிலையில், மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் இரவு குழந்தை உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் அப்பகுதி மக்களை மிகுந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

# ஒரே நாளில் 10 இடங்களில் காஸ் சிலிண்டர்கள் வெடிப்பு!

இலங்கையில் சமையல் எரிவாயு தொடர்பான சர்ச்சை நீடித்துள்ள நிலையில், கடந்த திங்கட்கிழமை ஒரே நாளில் 10 இடங்களில் சிலிண்டர்கள் வெடித்து சிதறிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த 10 சம்பவங்கள் முறையே ஹற்றன், மல்லியப்பு, மாரவில, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஹன்வெல்ல, பாதுக்க, எம்பிலிப்பிட்டிய, மாவனல்லை மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் பதிவாகியுள்ளன.

மாரவில பொலிஸாரின் தகவல்படி, உள்ளூர் குடியிருப்பில் உள்ள சமையலறையில் திங்கள் காலை எரிவாயு கசிவு ஏற்பட்டதாக சந்தேகிக்கப்படும் வெடிப்பு ஏற்பட்டது.

காஸ் சிலிண்டருடன் இணைக்கப்பட்டிருந்த ரெகுலேட்டரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக வெடிப்பு ஏற்பட்டதாகவும், காஸ் அடுப்பு மற்றும் அருகில் இருந்த பல மசாலா போத்தல்களுக்கு கணிசமான சேதம் ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, ஹற்றன் மல்லியப்புவ பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றில் சந்தேகத்துக்கிடமான வாயுக் கசிவால் ஏற்பட்ட வெடிப்பால் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், முறைப்பாட்டையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

திங்கள் காலை 8.30 மணியளவில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாக உணவகத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். காஸ் சிலிண்டரை இணைக்கும் குழாய் மற்றும் அடுப்பு வெடித்து, காலையில் சமையல் செய்து கொண்டிருந்த போது தீப்பிடித்தது.

இந்தச் சம்பவத்தின் போது யாருக்கும் காயம் ஏற்படவில்லை. மற்றுமொரு சம்பவம் திங்கள் மாலை வீட்டின் சமையல் அறையில் இருந்த எரிவாயு சிலிண்டர் வெடித்ததை மாத்தறை பொலிஸார் உறுதிப்படுத்தியமையுடன், சிலிண்டர் பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

அப்போது சமையலறையில் யாரும் இல்லை. பலத்த சத்தம் கேட்டு அப்பகுதி மக்கள் சமையலறைக்குள் ஓடி வந்து பார்த்ததில் அதிர்ச்சி அடைந்தனர். ரெகுலேட்டர் அருகே காஸ் சிலிண்டரின் மேல் பகுதியும், காஸ் ஸ்டவ்வும் சேர்ந்து வெடித்து சிதறியதை அவதானித்துள்ளனர்.

அருகில் இருந்த கண்ணாடி குடுவை உடைந்து சிதறியதால் சமையல் அறையைச் சுற்றிலும் சிதறியதாக மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகப் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து, மாத்தறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எம்பிலிப்பிட்டியவில் திங்கள் கதுருகசர சந்திக்கு அருகில் உள்ள குடியிருப்பில் உள்ள சமையலறை ஒன்றில் மேலும் ஒரு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளர் ஒரு கெட்டியை அடுப்பில் வைத்துவிட்டு அறைக்கு வந்த சிறிது நேரத்தில் பலத்த சத்தம் கேட்டது. காஸ் அடுப்பு வெடித்து தீப்பிடித்ததை தான் பார்த்தேன் எனவும், இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக எம்பிலிபிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஹங்வெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தித்தெனிய தெற்கு பகுதியில் உள்ள வீடொன்றுக்கு கொண்டு வரப்பட்ட மற்றுமொரு எரிவாயு சிலிண்டர் நவம்பர் 28 ஆம் திகதி இரவு வெடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தமையுடன், சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த காஸ் சிலிண்டர் நவம்பர் 24 ஆம் திகதி வாங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெடிப்பில் வீட்டில் இருந்த யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இதேவேளை, கடந்த நவம்பர் 28 ஆம் திகதி யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் உள்ள வீடொன்றிலும், கிளிநொச்சி திருவையாறு பகுதியில் உள்ள வீடொன்றிலும் எரிவாயு அடுப்பு தொடர்பான இரண்டு விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

மேலும், புத்தளம், ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் உள்ள வீடு மற்றும் கேகாலை றொக்ஹில் கஹடபிட்டிய பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து எரிவாயுக் கசிவு காரணமாக நவம்பர் 28 ஆம் திகதி இரண்டு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

இதேவேளை, நாடெங்கிலும் சிலிண்டர்களில் கசிவுகள், வெடிப்புக்கள் காரணமாக ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக மூன்று நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

விசாரணைகளுக்கான ஒருங்கிணைப்பு அதிகாரியாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி.எம்.டப்ள்யூ. தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

# அமெரிக்காவால் நடத்தப்படும் மெய்நிகர் உச்சி மாநாட்டில் இலங்கை புறக்கணிக்கப்பட்டமை ஆச்சரியத்துக்குரியதல்ல!

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

ஐக்கிய அமெரிக்காவால் நடத்தப்படும் ஜனநாயகம் தொடர்பான மெய்நிகர் உச்சி மாநாட்டில் இலங்கை புறக்கணிக்கப்பட்டதில் ஆச்சரியமில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அண்மையில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குக் கண்டனம் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சி, கடந்த அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட உயர் நெடுஞ்சாலையை அரசாங்கம் திறந்து வைப்பதாகவும் குற்றம் சாட்டியது.

இந்தத் தாக்குதல்களுக்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது அமைச்சரவையின் முன்னாள் அமைச்சர்களோ பொறுப்பென ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையோ அல்லது நாடாளுமன்ற தெரிவுக்குழு அறிக்கையோ கூறவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டத்தின் மூலம் ஈஸ்டர் தாக்குதலுக்குப் பொறுப்பேற்காத நபர்களின் குடியுரிமைகளைப் பறிக்க வேண்டும் என்று ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார் எனவும் இது ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு எதிரானது என்றும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது நீதித்துறை மற்றும் சட்டமியற்றும் செயல்முறையை முரண்பட வைக்கிறதென்றும் எனவே, இது இலங்கையின் அரசமைப்பின் 3 மற்றும் 4 ஆவது சரத்தை மீறுவதாகும் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த அறிக்கை அரசமைப்பை நிலைநிறுத்துவதற்கான ஜனாதிபதியின் சத்தியப்பிரமாணத்தையும் மீறுவதாகும் எனவும் ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

இந்தப் பின்னணியில், தற்போதைய அரசாங்கத்தின் கீழ், அமெரிக்காவால் நடத்தப்படும் ஜனநாயகம் தொடர்பான மெய்நிகர் உச்சிமாநாட்டுக்கு இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்படாததில் ஆச்சரியமில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

100 இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கும் மெய்நிகர் ஜனநாயக மாநாட்டிற்கு இலங்கைக்கு அழைப்பு விடுக்காததன் மூலம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இலங்கையை புறக்கணித்துள்ளார் என்றும் ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

# யாழ்ப்பாணம் – மாதகல் கடற் பரப்பில் அத்துமீறி இந்தியப் படகுகள் நுழைவு

இந்திய இழுவைப்படகுகள் மாதகல் கடலில் அத்துமீறி உள்நுழைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மாதகல் கடற்றொழிலாளர் சங்க தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தாம் உடனடியாக மாதகல் பகுதியின் கடற்படை கட்டளைத்தளபதிக்கு அறிவித்தேன் எனவும், அவர்கள் தமது கடற்படை படகு கரையிலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்தில் நிற்பதாகவும் அவர்களை கொண்டு விரட்டுவதற்கும், இயலுமாயின் கைது செய்வதற்குமான நடவடிக்கையை மேற்கொள்வதாக தெரிவித்தனர் எனக் கடற்றொழில் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

# எமது இருப்பு இல்லாமல்போகும் அச்ச நிலைமை காணப்படுகின்றது

## யாழ். மாவட்ட அரச அதிபர் வேதனை





சமூகம் மாற்றமடைய வேண்டும், நாங்கள் தொடர்ந்து இவ்வாறு சென்றால் எமது இருப்பே இல்லாமல்போகும் நிலைமையேற்படும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் திங்கட்கிழமை இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதியாக கல்வி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் இரா.நெடுஞ்செழியன், கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் டாக்டர் எஸ்.சிவச்செல்வன், மட்டக்களப்பு தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் முகாமையாளர் வி.சுவேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சீரற்ற காலநிலையால் பாதித்த குடும்பங்களுக்கு இழப்பீடு

வவுனியாவில் சீரற்ற காலநிலை காரணமாக பாதிப்படைந்த குடும்பங்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன என உதவி மாவட்ட செயலாளர் மகிந்தன் சபரிஜா தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக பெய்த கனமழை காரணமாக வவுனியாவில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், 7 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் 63 குடும்பங்களைச் சேர்ந்த 224 பேரும் பாதிப்படைந்திருந்தனர். வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இராசேந்திரங்குளம் பகுதியில் இடி மின்னல் தாக்கம் காரணமாக ஒருவர் மரணமடைந்த நிலையில் இழப்பீட்டு கொடுப்பனவாக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

அதன் முதல் கட்ட கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. கனமழை காரணமாக பகுதியளவில் சேதமடைந்த 7 வீடுகளுக்குமான இழப்பீட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் முதல் கட்ட இழப்பீடாக 10 ஆயிரம் ரூபா ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வீடுகளுக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட மிகுதி இழப்பீட்டுத் தொகையும் விரைவில் வழங்கப்படும். மேலும், மழையால் பாதிப்படைந்த 63 குடும்பங்களுக்கும் பிரதேச செயலகங்கள் ஊடாக நிவாரண உதவித் திட்டங்களும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உதவி மாவட்ட செயலாளர் மகிந்தன் சபரிஜா மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# வவுனியாவில் 10 பேர் எயிட்ஸுடன் சமூகத்தில் நடமாடி வருகின்றனர்!

## தொற்றாளர் எண்ணிக்கை 29 ஆக அதிகரிப்பு



வவுனியாவில் 10 பேர் எயிட்ஸ் தொற்றுடன் சமூகத்தில் நடமாடி வருகின்றமையுடன், 29 பேர் எயிட்ஸ் நோயாளிகளாக இனம் காணப்பட்டுள்ளனர் என வவுனியா மாவட்ட பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி கு.சந்திரகுமார் தெரிவித்தார்.

எயிட்ஸ் நோய் தொடர்பாக நேற்று ஊடகவியலாளர்களிற்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

உலக எயிட்ஸ் தினம் டிசெம்பர் முதலாம் திகதி உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இம்முறை 'சமத்துவமின்மையை ஒழிப்போம், எயிட்ஸை ஒழிப்போம், பெருந்தொற்றை ஒழிப்போம்' எனும் தொனிப் பொருளில் உலக எயிட்ஸ் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இலங்கையில் இதுவரை 4,142 எயிட்ஸ் நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். எந்த வித தொற்று அறிகுறிகள் இன்றி நோய்த் தொற்றுடன் 3,700 பேர் நடமாடி வருகின்றார்கள். வவுனியா மாவட்டத்தில் கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டின் காலாண்டுவரை 29 எயிட்ஸ் நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர்.

நடப்பாண்டில் இதுவரையான காலப்பகுதியில் ஒரு நோயாளி மாத்திரம் இனம் காணப்பட்டுள்ளார்.

இந்த 29 பேர்களில் 16 பேர் ஆண்கள். அவர்களில் 12 பேர் மரணமடைந்துள்ளனர். வெளிநாடு சென்று விபச்சாரத்தில் ஈடுபட்ட ஒருவர் இந்த வருடம் வவுனியாவில் மரணத்தைத் தழுவியிருந்தார்.

ஏனைய நோயாளர்களிற்கான சிகிச்சைகள் எம்மால் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களிற்கான மருந்துகளை நாம் வழங்கி வருகின்றோம். அந்த மருந்துகளின் மூலம் ஒருவரது மரணத்தைத் தாமதப்படுத்த முடியும்.

எயிட்ஸ் நோய் பரவுவதற்கான மூன்று காரணங்களில் எச்.ஐ.வி. தொற்றுள்ள ஒருவருடன் பாலியல் ரீதியாக தொடர்பு கொள்ளல், நோய்த் தொற்றுள்ள ஒருவரின் குருதியை இன்னுமொருவருக்கு செலுத்துதல், ஒரு பால் உறவு, தொற்றுள்ள தாய் ஒருவருக்கு பிறக்கின்ற பிள்ளை ஆகியோருக்கு இந்த நோய் பரவுகிறது.

இலங்கையில் தற்போது குருதி மாற்றங்களின் போது உரிய பரிசோதனைகள் முன்னெடுக்கப் படுகின்றன. அத்துடன் கர்ப்பிணிப் பெண்களிற்கு அவர்களது இணக்கத்துடன் எச்.ஐ.வி. பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன.


வவுனியாவை பொறுத்தவரை 15 வயது தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவர்களே தொற்றாளர்களாக இருக்கும் நிலை உள்ளது. இங்கு நோய்த் தொற்று ஏற்படுவதற்கு பிரதான காரணமாக விபச்சாரம் காணப்படுகின்றது. அத்துடன் 10 இற்கும் மேற்பட்டோர் நோய்த்தொற்றுடன் சமூகத்தில் நடமாடி வரும்நிலை காணப்படுகின்றது. வேறு மாவட்டங்களில் இருந்தும் விபச்சார தொழிலாளர்கள் இங்கு வருகை தருகின்றனர். எனவே எயிட்ஸ் நோய் தொடர்பாக இளைஞர்கள், இராணுவத்தினர், பொலிஸார், மாணவர்கள் ஆகியோருக்கு பல்வேறு தெளிவுபடுத்தல்களை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

சாதாரணமாக குறித்த நோயை புதிய முறைகளின் அடிப்படையில் 10 நாள்களில் குருதியில் இனம் காண முடியும். அந்தகாலப் பகுதி என்பது எமக்கு மிகவும் கடினமானதாக இருக்கிறது. ஏனெனில் அந்த காலத்திற்குள் மீண்டும் பாதுகாப்பற்ற பாலியல் உறவில் ஈடுபடுவதால் பலருக்கு நோய்தொற்றும் சந்தர்ப்பம் அதிகமாக இருக்கிறது.

எச்.ஐ.வி. வைரஸ் ஒருவருக்கு தொற்றினால் அது எயிட்ஸ் நோயாக மாறுவதற்கு 8 தொடக்கம் 10 வருடங்கள் எடுக்கின்றன. நோய்த் தொற்று ஏற்பட்டவர் சாதாரண ஒரு மனிதரை போலவே இருப்பார். அவரது முகத்தை வைத்து நோயை கண்டுபிடிக்க இயலாது. குருதியைப் பரிசோதனை செய்வதன் மூலம் மாத்திரமே அதனை கண்டுபிடிக்க முடியும். ஒரு தரமாவது பரிசோதனையைமேற்கொண்டால்குறித்த நோய் மற்றவர்களிற்கு தொற்றாமல் தடுக்கலாம்.

வவுனியா வைத்தியசாலையில் நோயாளர்களாக அனுமதிக்கப்படும் சிலருக்கு எச்.ஐ.வி. பரிசோதனை மேற்கொள்ளப் படுகிறது. தாமாகவும் சிலர் வருகை தந்து பரிசோதனையை மேற்கொள்கின்றனர். எனினும் அது குறைவாக காணப்படுகின்றது. எனவே வவுனியா வைத்தியசாலையில் அமைந்துள்ள பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு பிரிவில் பொதுமக்கள் தாமாக வந்து பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். இங்கு பரிசோதனைகள் மேற்கொள்பவர்களது இரகசியங்கள் பாதுகாக்கப்படும். அத்துடன் சுயமாக வீட்டிலிருந்து பரிசோதனை செய்யும் முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. -எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (100)

## தனி நடிப்பு போட்டிக்கு விண்ணப்பிக்க டிசெம்பர் ஐந்து வரையில் காலம் நீடிப்பு




செயல் திறன் அரங்க இயக்கம் வடமாகாண கல்வித்திணைக்களத்தினூடாக நடத்துகின்ற தனி நடிப்பு போட்டிக்கு விண்ணப்பிப்பதற்கான திகதி டிசெம்பர் ஐந்து வரை நீடிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கும் கொரோனா நோய் தொற்று ஏற்படுத்திய அனர்த்தம் புதியதொரு மெய்நிகர் வெளியை (online space) எமக்குத் தந்துள்ளது. இந்த வெளியில் உலகெங்குமிருக்கும் நாடகப்பிரியர்கள் பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். செயல் திறன் அரங்க இயக்கம் மெய்நிகர்வெளியைநாடக வெளியாக பயன்படுத்தும் முயற்சியை ஜனவரி, 2021 தொடக்கம் செயற்படுத்திவருகிறது. இதன் இன்னொரு முயற்சியாக மெய்நிகர் வெளியில் சிறுவர்களை ஆற்றுகை செய்யத் தூண்டும் முயற்சியாக கலாநிதி விஜயரத்தினம் ஜோன் மனோகரன் கென்னடி அறக்கட்டளையுடன் இணைந்து வடமாகாணத்திலுள்ள பாடசாலைச் சிறுவர்களுக்கிடையில் பிரமாண்டமான தனிநடிப்புப் போட்டியொன்றை இணையவழி ஒழுங்கு செய்து நடத்தத் தீர்மானித்துள்ளது. இதன் இறுதி நிகழ்வு எதிர்வரும் ஜனவரி 10, 2022 அன்று நடைபெறும். அன்றைய தினம் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறும். இந்தப் போட்டியை இனி வரும் ஒவ்வொரு ஆண்டும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்கப்படுத்தும் இந்தச் செயற்பாட்டை வடமாகாண கல்வித்திணைக்களத்தினூடாக செயல் திறன் அரங்க இயக்கம் நடத்துகின்றது.

இந்த ஆண்டு பேரிடரை வெல்வோம் என்ற கருப்பொருளில் தனிநடிப்புப் போட்டி நடைபெறவுள்ளது. அதாவது உதாரணமாகதற்போதையகொரோனா பேரிடர் உருவாக்கிய சூழல், அதனால் ஏற்பட்ட தாக்கம், அது எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது, வெல்லப்பட்டது போன்றவை தொடர்பான பல சுவாரசியமான சம்பவங்களும், விநோதமான நிகழ்வுகளும், துயரமான கதைகளும் நம்மத்தியிலும் உலகெங்கும் உள்ளன. அவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து தனிநடிப்பாக நிகழ்த்த வேண்டும். அதாவது, போட்டியாளர் தாம் எதிர்கொண்ட இடரையும் அதனை வென்ற சூழலையும் கதைக்கருவாகத் தேர்ந்தெடுக்க முடியும்.

போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி : 05.12.2021. (நீடிக்கப்பட்ட திகதி)

சிறுவர்களுக்கான தனிநடிப்புப் போட்டி திறந்த போட்டியாக நடைபெறும். இதில் வடமாகாண பாடசாலைச் சிறுவர்கள் மட்டும் பங்கு கொள்ள முடியும். ஒவ்வொரு பாடசாலையிலுமிருந்து 18 வயதிற்குட்பட்ட ஆண்டு 4 -13 வரையான வகுப்பு மாணவர்களில் பத்து மாணவர்கள் இதில் பங்குகொள்ள முடியும். கல்வி வலையம், மாகாணம் என்ற அடிப்படையில் போட்டி நடைபெறும்.

போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் சிறுவர்கள் கூகிள் படிவமூடாக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்பதற்கானகூகிள் படிவ இணைப்பு https://forms.gle/bD5Gdjbd9cFFKKQC6

போட்டிக்கு பதிவு செய்பவர்களுக்கான தனிநடிப்பு தொடர்பான அறிமுகக் கருத்தமர்வு செயல் திறன் அரங்க இயக்கத்தால் நடத்தப்படும். மேலதிக தகவல்களுக்கு வட்சப் இலக்கம் ஊடாக தொடர்பு கொள்ளலாம்

ஈ.மெயில்: jaffnatheatre@gmail.com

தொ.பே.இல : 0094773112692 (WhatsApp)

### தனித் தமிழ் பிரதேச சபையான

## வெருகல் சபை 'பட்ஜட்' தோல்வி

திருகோணமலை மாவட்டம், வெருகல் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்தின் முதலாம் வாசிப்பு ஒரு மேலதிக வாக்கால் நேற்று தோல்வி கண்டது.

இந்நிலையில், இரண்டாம் வாசிப்பை எதிர்வரும் 10ஆம் திகதி நடத்த சபை தீர்மானித்துள்ளது.

13 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 7 ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிகொண்டதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களை மட்டும் கொண்ட பிரதேச சபையாக இது இருக்கின்ற போதிலும் தேசிய சிங்களக் கட்சிகளும் ஆசனங்களைப் பெற்றுள்ளன.

அத்துடன் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல சபைகளில் ஆட்சி அமைத்தாலும் பிற கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியாக ஆட்சியமைத்த சபை இதுவாகும்.

இப்படிப்பட்ட பெருமைகளைக் கொண்ட சபையின் பாதீடு, அதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இருவர் எதிராக வாக்களித்தமையால் இந்த நிலை சபைக்கு ஏற்பட்டுள்ளது.

## கிளிநொச்சியிலும் உறவுகள் கவனவீர்ப்புப் போராட்டம்!



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் மாதத்தில் இறுதியாக வரும் 30 திகதிகளில் நடத்திவரும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் கிளை அலுவலகம் முன்பாக நேற்று நடைபெற்றது.

குறித்த போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இவர்கள் நீதி வேண்டி கோஷங்களை எழுப்பினர்.

# நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் காணாமற்போனோர் உறவுகள் ஆக்ரோஷம்






எமக்கான நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடிக்கொண்டே இருப்போம் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால், வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு, கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதன்போது அவர்கள் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

எமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி மூன்று வருடங்களுக்கும் மேலாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

ஆனாலும் எமக்கான நீதியை எந்த ஓர் அரசாங்கமும் வழங்கவில்லை. எமது உறவுகளைத் தருமாறே நாம் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். நாம் வேறு எதனையும் இந்த அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. எனவே, எமக்கான நீதி ஒன்று கிடைக்கும் வரையில் நாம் இந்தப் போராட்டங்களை இடைநிறுத்தாமல் தொடர்ந்து முன்னெடுப்போம்.

இதேவேளை முல்லைத்தீவில் ஊடகவியலாளரை இராணுவத்தினர் தாக்கியமை அநீதியான செயற்பாடு. மக்களின் பாதுகாப்புக்காகவே இராணுவம் நிலைகொண்டுள்ளதாகக் கூறி, தமிழ் மக்களை பாதிக்கும் செயற்பாடுகளையே இந்த இராணுவம் முன்னெடுத்து வருகின்றது. எனவே அதனையும் கண்டிக்கின்றோம் - என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## வரலாற்றில் முதல் தடவையாக செங்கோலுடன் ஆரம்பமானது யாழ்ப்பாணம் மாநகரசபை அமர்வு



வரலாற்றில் முதல் தடவையாக யாழ். மாநகரசபையின் அமர்வு, செங்கோலுடன் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம் பெற்றது.

அண்மையில் சிவபதமடைந்த நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 10 ஆவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நினைவாக நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானம், யாழ்.மாநகர சபைக்கு செங்கோல் ஒன்றை வழங்கியது.

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 11ஆவது நிர்வாக அதிகாரி குமரேஷ் சயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட செங்கோலுடன், வரலாற்றில் முதல் தடவையாக நேற்றைய மாநகர அமர்வு, மாநகர முதல்வர் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## போட்டிகளில் வெற்றியீட்டியுள்ள மாணவர்களுக்குக் கௌரவிப்பு



தொழில் வழிகாட்டல் வாரத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் நடைபெற்ற போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவித்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) மட்டக்களப்பில் இடம் பெற்றது.

நாட்டின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, தற்போதைய அரசாங்கத்தின், ஜனாதிபதியின் தேசிய கொள்கைப் பிரகடனமாகிய 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தில் தொழிற்படையின் ஆற்றல்கள், திறன்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவுமிக்க மனித வளத்தை வலுவூட்டுகின்ற அடிப்படையில் உலகளாவிய மட்டத்திலான தொழிற்படையை இலங்கையில் உருவாக்கும் நோக்கில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் தேசிய தொழில் வழிகாட்டல் வாரம் நிகழ்வு கடந்த ஒக்ரோபர் 04 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடளாவிய ரீதியாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கொவிட் 19 நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, நிகழ்நிலை மூலமாக நடைபெற்றிருந்தது.

'நாட்டுக்கு சுமை இல்லாத உழைக்கும் தலைமுறை' எனும் தொனிப்பொருளில் 'தொழில் வழிகாட்டலை சமூகமயமாக்குதல்' எனும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தொழில் வழிகாட்டல் வாரம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தேசிய தொழில்வழிகாட்டல் வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சு, சித்திரம் மற்றும் வினாவிடை போட்டி இத்தோடு 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கட்டுரை போட்டி என்பன நடைபெற்றிருந்தன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் வெற்றிபெற்று மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்த சாதனையாளர்களையும், மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப்பெற்றவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

இதன்போது கட்டுரை, பேச்சு, சித்திரம், வினாவிடை போட்டி மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள், பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டி என்பவற்றில் பங்குபற்றி தேசிய ரீதியில் வெற்றிபெற்ற 3 மாணவர்களும், மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்ற மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அடங்கலாக 15 பேரும் இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிதிகளினால் பாராட்டி பணப் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், மாவட்ட செயலக உயரதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர் உள்ளிட்ட குறிப்பிட்டளவிலானோர் இதன் போது கலந்துகொண்டனர்.

## புலம்பெயர் தமிழிலக்கிய முன்னோடி...

*(07ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*இராஜேஸ்வரி, தமது இலக்கியப் படைப்புகள் திரைப்படத்துறை முதலானவற்றில் மாத்திரம் முழுமையாக கவனம் செலுத்தியிருந்தால் எமது தமிழ் சமுதாயத்துக்கு ஓர் அபர்ணா சென்னோ, ஒரு மீரா நாயரோ, ஒரு தீபா மேத்தாவோ கிடைத்திருப்பார். ஆனால், அவர் தமது பணிகளை எமது தேசத்து பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம், குறிப்பாக பெண்கள் பக்கம் தொடர்ந்தார். உண்மையான படைப்பாளி - பத்திரிகையாளர் எப்பொழுதும் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம்தான் நிற்பார். அதற்கு சிறந்த முன்னுதாரணம் இராஜேஸ்வரி.*

*தமிழ்நாட்டில் மூத்த இலக்கிய விமர்சகர் கோவை ஞானி, ராஜம்கிருஷ்ணன், பாலுமகேந்திரா, சுஜாதா உட்பட பலருடன் ஆரோக்கியமான நட்புறவைப்பேணியவர். ஜெயகாந்தனுடன் கருத்து ரீதியாக மோதியிருப்பவர்.*

*இயற்கை எழிலுடன் துலங்கிய ஒரு கிராமத்தின் சராசரிப் பெண்ணின் கனவுகள், பனியில் மூழ்கும் தேசம் சென்ற பின்னரும் தொடர்ந்தன. அவற்றுள் எத்தனை நனவாகின...? எத்தனை நிராசையாகின...? என்பதை அவரது மனச்சாட்சியிடம்தான் கேட்க முடியும்.*

*இராஜேஸ்வரி ஒரு கலகக்குரல். துணிவுடன் எதனையும் எதிர்கொள்ளும் திராணியுள்ள ஆளுமை. ஆனால், அவருடன் பழகினால் இந்தக் குழந்தையிடமா இவ்வளவு தர்மாவேசம் என்பது ஆச்சரியமாக இருக்கும். அவரது எளிமை, தன்னம்பிக்கை, தளராத முயற்சி என்பன முன்மாதிரியானவை.*

*நாவல், சிறுகதை, விமர்சனம், ஆய்வு முதலான துறைகளில் சில நூல்களை வரவாக்கியிருக்கும் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் சிறுகதைகளில் பெண்ணிய வெளிப்பாடு என்ற தொனிப்பொருளில் இம்மாதம் 04 ஆம் திகதி ( 04-12-2021 ) சனிக்கிழமை மெய்நிகரில் புது டெல்லியிலிருந்து எழுத்தாளரும் பத்திரிகையாளருமான வாசந்தி, தமிழ்நாட்டிலிருந்து பேராசிரியை பிரேமா, இங்கிலாந்திருந்து எழுத்தாளரும் வானொலி ஊடகவியலாளருமான நவஜோதி யோகரட்ணம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.*

*ஆஸ்திரேலியா கன்பரா தமிழ்க்களஞ்சியம் (*Tamil Trove*) இதனை ஏற்பாடு செய்துள்ளது. மெய்நிகர் இணைப்பு விவரம்:*

*ஆஸ்திரேலியா இரவு 8.00 மணி*
*இலங்கை - இந்தியா மதியம் 2.30 மணி*
*இங்கிலாந்து - ஐரோப்பா முற்பகல் 9.00 மணி*

Join Zoom Meeting
https://us02web.zoom.us/j/87065831890?pwd=MGlHNnpPYmhVNEk1RW9JU1MvTEVGQT09
Meeting ID: 870 6583 1890    Passcode: 332130

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2021 இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர்
Kalaikkathir

## கொட்டன்களுடன் குவிக்கப்பட்ட கடற்படையினர்

# மாதகலில் காணி அளவீட்டுப் பணி மக்களால் நேற்றும் தடுத்துநிறுத்தம்







(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

**யாழ்ப்பாணம் – மாதகல் கிழக்குப் பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளைச் சுவீகரிக்கும் முயற்சி கடற்படையினர், கடற்படை புலனாய்வாளர்கள் மற்றும் இராணுவ புலனாய்வாளர்கள் ஆகியோரின் அச்சுறுத்தல்களையும் தாண்டி நேற்றும் மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டது.**

மாதகல் கிழக்கு ஜே/150 கிராம உத்தியோகத்தர் பிரிவு, குசுமந்துறையில் தனியாருக்குச் சொந்தமான ஒரு பரப்பு காணி கடற்படையினரின் தேவைக்கு சுவீகரிப்புக்காக அளவீட்டுப் பணிகள் நேற்று நில அளவை திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவிருந்தன.

இந்தநிலையில் திங்கள் இரவு 11 மணியளவில் கடற்படையினர் தமது வீட்டுக்கு வருகைதந்துகாணியைவழங்குவதற்கு சம்மதம் தெரிவித்து கையொப்பம் வைக்குமாறு கேட்டனர் என காணி உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

அளவீட்டுப் பணிகளைத் தடுத்து நிறுத்துவதற்காக குறித்த இடங்களில் ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது கடற்படையினர் கொட்டன்களுடன் குவிக்கப்பட்டு, மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

காணியை அளவீடு செய்வதற்கு எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டதை அடுத்து அளவீட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டு நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்திலிருந்து விலகிச் சென்றனர்.

தொடர்ந்தும் அரசியல் பிரமுகர்கள் மற்றும் கிராம மக்கள் கடற்படை முகாமுக்கு முன்பு அமர்ந்து இருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியமயை அடுத்து சம்பவ இடத்துக்கு வருகைதந்த இளவாலை பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கலந்துரையாடினர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எதிர்வரும் இரண்டாம் திகதி சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைந்து கலந்துரையாடுகிறேன் என வாக்குறுதி வழங்கியதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து சென்றிருந்தனர்.

## வல்வெட்டித்துறை நகர சபை ‘பட்ஜட்’ மீண்டும் தோற்கடிப்பு

### பதவியிழந்தார் நகர சபைத் தலைவர் செல்வேந்திரா

(ந.லோகதயாளன்)

வல்வெட்டித்துறை நகர சபையின் வரவு – செலவுத் திட்டம் நேற்று இரண்டாவது முறையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபை பட்ஜட் கூட்டம் நேற்று நகர சபைத் தலைவர் என். செல்வேந்திரா தலைமையில் நடைபெற்றது.

அதன்போது கடந்த 17ஆம் திகதி சபையில் முன் வைக்கப்பட்ட பட்ஜட் தோற்கடிக்கப்பட்ட நிலையில், நேற்று திருத்தங்களுடன் சபையில் முன் வைக் கப்பட்ட போதும் அதுவும் தோற்கடிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் தலைவர் கே.கருணாந்தராசா (வயது 76) கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கடந்த ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி உயிரிழந்தார். அதையடுத்து புதிய தலைவராக என்.செல்வேந்திரா கடந்த செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார்.

இந்நிலையில், அவரால் முன்வைக்கப்பட்ட இரு பட்ஜட்டுக்களும் தோல்வியடைந்துள்ளன. இதனால் நகர சபைத் தலைவர் என்.செல்வேந்திரா பதவியிழந்துள்ளார்.

## இந்தியாவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர், பொருளாளர், உப தலைவர் ஆகியோர் அடங்கிய குழு நேற்று இந்திய துணைத் தூதுவரை யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளனத் தலைவர் அன்னராசா –

யாழ். மாவட்ட மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையால் பாதிக்கப்படுகின்றனர். இந்திய மீனவர்களின் அத்துமீறல் எங்கள் மீனவப் பரம்பலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதோடு மீனவர்கள் கூலி தொழிலுக்குச் செல்லக் கூடிய துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

நீண்ட காலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிராகப் பல போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும் தற்போதும் இந்திய மீனவர்களின் வருகை பருத்தித்துறை மற்றும் நெடுந்தீவு பிரதேசங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்காக தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகிறோம். அந்தவகையில் யாழ்.இந்தியத் துணைத் தூதரைச் சந்தித்து பேசி உள்ளோம்.

குறிப்பாக இந்திய மீனவர்களுக்கும் வடக்கு மீனவர்களுக்கும் இடையே உள்ள பிரச்சினைக்கு தீர்வு காணுமாறும் இந்தியாவுக்கோ அல்லது தமிழ்நாட்டுக்கோ எதிரான பிரச்சினையாக இதனைக் கருத வேண்டாம் எனவும் கோரியுள்ளோம்.

பல கோடி ரூபா சொத்துகளை இழந்து இருக்கின்றோம். எங்கள் கடற்தொழில் அமைச்சு 500 கோடி ரூபாவுக்கு மேல் இந்திய அரசிடம் நட்டஈடு கோரியுள்ளது.

இருந்தபோதிலும் யாழ். மாவட்ட மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனங்களை பொறுத்தவரை அண்ணளவாக 400 மில்லியன் ரூபாவை எங்கள் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்காக வழங்குமாறும் அதற்குரிய திட்டம் ஒன்றை தயாரித்து கடந்த வாரம் கடற்றொழில் அமைச்சரை சந்தித்து கையளித்திருக்கின்றோம். அதனைத் தொடர்ந்து இந்தியத் துணைத் தூதுவரிடமும் கையளித்துள்ளோம்.

எங்கள் மீனவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்க இந்த 400 மில்லியன் ரூபா உதவியை தொழிலாளர்களுக்கு மானியமாகவும் சுழற்சி முறையில் வழங்குவதற்கு கோரி நிற்கின்றோம்.

அந்தக் கோரிக்கையைத் தாம் பரிசீலிப்பதாக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் தெரிவித்தார் – என்றார்.

## 18 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 346 ஆக அதிகரித்துள்ளது.

## படைக் காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சண்டிலிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட மாதகல் பகுதியில் கடற்படையினருக்கு நிலம் சுவீகரிக்கும் நோக்கில் 3 நாள்கள் அளவீடு செய்ய முறபட்ட சமயம் மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பினால் அது தடுத்து நிறுத்தப்பட்டது. தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கீரிமலைப் பிரதேசத்திலும் இதே நிலமையே காணப்பட்டது.

சுவீகரிப்புக்கான அளவீடு செய்யும் ஒழுங்கு முறையின்படி அது தொடர்பான தகவல் காணி உரிமையாளருக்கு வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்கி விட்டுச் செல்வதனாலேயே உரிமையாளர்களும் அரசியல்வாதிகளும் கூடி எதிர்ப்புத் தெரிவிப்பதால், இனிவரும் நாள்களில் முற்கூட்டிய அறிவிப்பு இன்றி, இரகசியமாக அளவீடு செயவதற்கான ஏற்பாடுகளும் இடம்பெறுகின்றன என அறிய வந்தது.

தற்போதைய ஆளுநர் பதவி ஏற்றதன் பின்பு இதுவரை அளவீடு செய்ய முற்பட்ட சமயம் தடுத்து நிறுத்தப்பட்ட – நான்கு கடற்படை முகாம்களிலும் இனம் காணப்பட்ட – 16 காணிகளின் உரிமையாளர்களையும் இன்று 2 மணிக்கு தனது அலுவலகத்திற்கு அழைத்துள்ள ஆளுநர் இழப்பீட்டுடன் அந்த நிலங்களை விடுவிக்க அவர்களின் சம்மதம் கோரும் முயற்சியில் ஈடுபடவுள்ளார் எனத் தெரிகிறது.

அந்த முயற்சியில் வெற்றியளிக்காத போக்குக் காணப்பட்டால் இனி வரும் நாள்களில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் சட்டப்படி அன்றி, இரகசியமாக மேற்கொள்ளத் திட்டமிடப்படுகின்றதாம். இதனால் இன்றைய கூட்டத்திறகு இந்த ஆளுநரை நம்பி எவ்வாறு செல்வது என மேற்படி நில உரிமையாளர் ஒருவர் விசனத்துடனும் சீற்றத்துடனும் கூறினார். தற்போது ஆளுநர் மேற்கொள்ளும் நடவடிக்கை எமது நிலங்களை சுவீகரித்து படையினருக்கு தாரை வார்க்கும் முயற்சி என்பது அப்பட்டமாக தெரிகின்றது என்றார் அவர்.

இவ்வாறு ஆளுநரும் சேர்ந்து அடாத்தகப் பறிக்கும் ஒரு நிலைமை ஏற்படுமாக இருந்தால், ஆளுநர் செயலகத்தில் இருக்கும் நாளில் இருந்து காணி உரிமையாளர்கள் அவரது அலுவலகத்தின் இரு வாசல் கதவுகளையும் இழுத்து மூடி, இரவு பகலாக சத்தியாக்கிரகம் இருந்து, ஆளுநரை அவரது அலுவலகத்திற்குள்ளேயே தனிமைப்படுத்தி சிறை வைக்கும் நிலைமையே ஏற்படும்போல் தோன்றுகின்றது – என தனது ஆதங்கத்தை தெரிவித்தார் அவர்.

## நேற்று 722...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 63 ஆயிரத்து 989 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 347 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 40 ஆயிரத்து 387 ஆக அதிகரித்துள்ளது.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.